தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

# முற்றம்

ஊரக வளர்ச்சி
மற்றும் ஊராட்சித் துறை
விலை ரூ. 20/-
மலர் 25
இதழ் 01
மே 2023

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்



## மகளிர் சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்கான

# மகத்தான அறிவிப்புகள்



LED-யில்
புது வெளிச்சம் படைக்கிறோம்.
பெண் சமூகத்தில்
புது வளத்தை படைக்கிறோம்.





LED பல்பு உற்பத்தி.

இணை மானிய நிதி, எனது LED பல்பு தொழிலுக்கு ஆதரவளித்தது.
என் சமூகத்தினருக்கும் தொழில் வாய்ப்பை உருவாக்கியது.



பெயர்: **செல்வி.பூவிழி**
ஊராட்சி: **முத்தரசநல்லூர் கிராமம்**
வட்டாரம்: **அந்தநல்லூர்**
மாவட்டம்: **திருச்சி**

இவர்களது உற்பத்திப் பொருட்களை வாங்க தொடர்புகொள்ளவும்
**98436 00565**

**வாழ்ந்து காட்டுவோம் திட்டம்**
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
5வது தளம், திருவிக தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை- 600032, தமிழ்நாடு

(044) 434 43200 | tnrtpstate@gmail.com | www.tnrtp.org
VaazhndhuKaattuvom VaazhndhuKaattuvom tn_rtp



திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

அன்புள்ள சகோதரிகளே,

சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை மாநிலத்தின் அனைத்துப் பகுதியில் வசிக்கும் மகளிரிடம் கொண்டு சேர்க்கும் உன்னதப் பணியினை மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்க அலகுகள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி சிறப்புற மேற்கொண்டு வருகின்றன.

சமீபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத் தொடரில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 2023–2024ஆம் நிதியாண்டில் 30,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் தரும் வகையில், “45,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி வழங்குதல், 5,000 சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி, 7,500 நுண் மற்றும் குறு தொழில் நிறுவனங்களை வலுப்படுத்துதல், சுய உதவிக் குழுக்கள் ஏற்கனவே செய்து வரும் தொழிலை விரிவுபடுத்துவதற்கு 1,000 கிராம ஊராட்சிகளில் நுண் தொழில் நிறுவனங்களுக்கான நிதி திட்டம், ஊரகப் பகுதிகளில் 10,000 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு அவைகளுக்கு சுழல் நிதி வழங்குதல், ஊரக இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க 1,000 புதிய சமுதாய திறன் பயிற்சிப் பள்ளிகள், 70 ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் புத்தாக்கப் பயிற்சி, மீட்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களின் மறுவாழ்விற்காக பொருளாதார கூட்டமைப்புகள் அமைத்தல், மாநிலத்தின் 100 முக்கிய சுற்றுலா தலங்களில் மதி அங்காடிகள், சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை மதிப்பு கூட்டி, சந்தைப்படுத்த ஏதுவாக பொதுசேவை மையங்கள், சிறப்பு சுய உதவிக் குழுக்களின் பொருட்களை விற்பனை செய்ய மதி எக்ஸ்பிரஸ் வாகனங்கள், சுய உதவிக் குழுக்களின் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவாக காலண்டிற்கு ஒருமுறை வாங்குவோர் – விற்போர் சந்திப்புகள், சான்றளிக்கப்பட்ட 100 சிறுதானிய விதை உற்பத்தி அலகுகள் அமைத்தல், 37 மாவட்ட பெருந்திட்ட வளாகங்களில் சிறுதானிய உணவகங்கள், 37 மாவட்டங்களிலும் வானவில் மையம் எனும் பாலின வள மையம், அனைத்து மாவட்டங்களிலும் 100 இளைஞர் திறன் திருவிழாக்கள் நடத்துதல், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திட சுய உதவிக் குழு மகளிருக்கு சமையல் செய்முறைப் பயிற்சி, சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நிதியினை கண்காணித்திட மின்னணு தளம் உருவாக்குதல் மற்றும் சமுதாய வளப் பயிற்றுநர்களின் திறனை மேம்படுத்துவதற்காக கற்றல் மேலாண்மை அமைப்பு எனும் மின்னணு தளம் உருவாக்குதல்” என நன்மை பயக்கும் நல்ல பல அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டங்களை நடைமுறைப்படுத்த நமது நிறுவனம் முழுமூச்சுடன் செயலாற்றி வருகிறது. இத்திட்டங்கள் மட்டுமின்றி பெண்களுக்கு நன்மை தரும் நமது நிறுவனத்தின் திட்டங்கள் அனைத்தையும் வெற்றிகரமாக செயல்படுத்துவதில் நாம் என்றும் முன்னிற்கிறோம் என்பதையும், இத்தகைய திட்டங்கள் அனைத்தும் சுய உதவிக் குழு மகளிரின் வளர்ச்சிப் பயணத்திற்கு மேலும் ஒரு மைல்கல்லாக அமையும் என்பதையும் பெருமையுடன் கூறிக் கொள்கிறேன்.

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்

என்ற குறள் வரியில் குறிப்பிட்டுள்ளவாறு, “நம்மால் முடியுமா? என்று மனத்தளர்ச்சி அடையாமல், முடியும் என்ற நம்பிக்கையுடன் முயற்சி செய்தால் அதுவே பெரிய வலிமையாக அமையும்” என்பதை மனதில் இருத்தி, மகளிர் சுய உதவிக் குழுக்கள் அனைவரும் செயல்பட்டு வெற்றி பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, உழைப்பால் உயர்ந்து வரும் உங்கள் அனைவருக்கும் உழைப்பாளர் திருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்

மீண்டும் சந்திப்போம்...

அன்புடன்,

(மேலாண்மை இயக்குநர்)



திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,

## எனது அன்பு சகோதரிகளே,

உங்கள் அனைவருக்கும் தொழிலாளர் தின நல்வாழ்த்துகள்.

மகளிரின் மேம்பாட்டிற்காகத் துவக்கப்பட்ட நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், ஊரக மற்றும் நகர்ப்புரங்களில் வசிக்கும் ஏழை எளியவர்களை குழுவாக ஒன்றிணைத்து, அவர்களுக்கு நிர்வாகம் மற்றும் தொழில் பயிற்சிகளை வழங்குதல், வங்கிக் கடன் பெற்றுத் தந்து சுய தொழில் தொடங்க ஊக்குவித்து, தொழில் முனைவோர்களாக முன்னேற்றம் அடையச் செய்தல் போன்றவற்றை தனது தலையாய பணியாக மேற்கொண்டு வருகிறது.

மகளிர் நலனில் பெரிதும் அக்கறை கொண்ட நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள், கடந்த மாதம் நிறைவுற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் 2023–2024ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை விவாதத்தின்போது சுய உதவிக் குழு மகளிரின் வளர்ச்சிக்காக பயனுள்ள பல்வேறு நலத் திட்டங்களுக்கான அறிவிப்புகளை அறிவித்துள்ளார். இந்த அறிவிப்புகளை விரைவாக நிறைவேற்றிட நமக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதுணையாக இருக்கிறார் என்பது நமக்கு மகிழ்ச்சி தரக் கூடியதாக உள்ளது.

நமது நிறுவனத்தின் துணை அமைப்புகளான தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் போன்றவற்றின் மூலம் தமிழ்நாட்டின் கடைகோடி கிராமத்தில் வசிக்கும் ஏழை எளிய பெண்களும் மகளிர் நலத் திட்டங்களால் பயனடைந்து வருகின்றனர் என்பது அனைவரும் அறிந்ததுதான்..

மேலும், இளைஞர்களுக்குத் தேவையான தொழிற்பயிற்சிகள் வழங்கி, அவர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள் பெற்றுத் தருவதுடன், சுய தொழில் துவங்க வாய்ப்புகளும் இளைஞர் திறன் பயிற்சித் திட்டம் வாயிலாக வழங்கப்படுகிறது. வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்புகள் பெற்றுத் தரப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ஏழை எளிய பெண்களின் முன்னேற்றத்திற்காக செயல்பட்டு வரும் நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வெற்றிகரமான செயல்பாடுகளுக்கு உரியவர்களாக இருக்கும் நீங்கள், உங்களின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பவற்றைத் தகர்த்து, மேலும் மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

*மீண்டும் சந்திப்போம்.*

அன்புடன்,

(பா. பிரியங்கா பங்கஜம்)

கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவி குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவி குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் :
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

tncdwH
Tncdw State
www.Tncdw.org
Tncdwofficial

"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்களை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர், இன்ஸ்ட்ராகிராம் மற்றும் முகநூல் பக்கங்களை பின்தொடருங்கள்.."

## குறளும் – பொருளும்

**தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்**
**வன்மையு ளெல்லாந் தலை**

*அறிவு ஆற்றல் ஆகியவற்றில் தம்மைக் காட்டிலும் சிறந்த பெரியவராய் இருப்பவரோடு உறவுகொண்டு அவர்வழி நடப்பது மிகப்பெரும் வலிமையாக அமையும்.*

# உள்ளே...


| | |
|---|---|
| மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு வரவேற்பு | 07 |
| சென்னை விமான நிலையத்தின் புதிய ஒருங்கிணைந்த முனையக் கட்டடம் திறப்பு | 08 |
| தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு | 13 |
| "சமத்துவ நாள்" உறுதிமொழி ஏற்பு | 14 |
| மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி | 16 |
| செயற்கை பவளப்பாறைகள் நிறுவுதல் (சமுதாய உட்கட்டமைப்புபணி) | 32 |


சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர், முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
முற்றம்
விலை ரூ. 20/- • மலர் 25 • இதழ் 01 • மே 2023

கௌரவ ஆசிரியர்கள்
திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
தலைமை செயல் அலுவலர்,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

திருமதி. **ஜெ.இ. பத்மஜா,** இ.ஆ.ப.,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
திரு. **எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
திருமதி. **க. முத்துமீனாள்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திருமதி. **எஸ். கவிதா,** கூடுதல்இயக்குநர், TNCDW
திரு. **நா. அருள்ஜோதி அரசன்,** கூடுதல்இயக்குநர், VKP
திரு. **பி. மந்திராச்சலம்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **ஆர். சங்கர்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **வி. பிச்சை,** கூடுதல் இயக்குநர், NULM

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
நிர்வாக ஆசிரியர்
திருமதி. **ரா. ஜீவா,** பொது மேலாளர்,

நிதி நிர்வாகம்
திரு. **ச. இராஜேந்திரன்,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
திரு. **வா. ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு : **பி.ஆர்.இ குழுமம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
**'முற்றம்'**
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

# பூமி சுகாதாரத்தை பாதுகாப்போம்...

அன்புள்ள வாசகர்களுக்கு,

ஒவ்வொரு மனிதரும் தங்களின் உடல், சுகாதார கேடால் பாதித்து விடக்கூடாது என அக்கறையுடனும் கண்ணும் கருத்துமாகவும் பாதுகாத்து வருகின்றோம். வியாதிகள் வராமலிருக்க நோய் எதிர்ப்பு மருத்துவத்தை அவசர அவசரமாக மேற்கொள்கின்றோம். இதன் அடிப்படையில்தான் மக்களின் உடல் நலனை காக்கும் நோக்கில், வருமுன் காப்போம் என்ற திட்டத்தை அரசு செயல்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

தனி மனிதர்கள் தங்களை கவனமுடன் பாதுகாத்துக் கொள்ள, பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வரும் அதேவேளையில், மனிதர்கள், விலங்குகள் மற்றும் தாவரங்கள் ஆகிய எண்ணிலடங்கா உயிர்களைத் தாங்கிக் கொண்டு இந்த பூமியானது, அந்த உயிர்களை பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கான வியப்பு மிக்க இயற்கை சூழல்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இப்படிப்பட்ட இந்த அழகிய பூமியை, எவ்வித அழிவுமின்றி பாதுகாக்க வேண்டியது இந்த சமூகத்தின் முக்கிய பொறுப்பாகும் என்பது காலத்தின் கட்டாயமாகிறது. இவ்வளவு முக்கியத்துவம் நிறைந்த இந்த பூமியை பாதுகாப்பதற்கு இவ்வளவு காலமாக முன்னுரிமையும் முக்கியத்துவமும் அதிகமாக கொடுக்கப்படாத காரணத்தினால், இன்று பூமி வெப்பமடைந்து, பருவநிலையில் மாற்றம் ஏற்பட்டு பூமி அடியோடு அழிவதற்கான தொடக்கம் என்றே பார்க்கப்படுகிறது.

இந்த பூமியை பாதுகாப்பதற்கு இன்று அறிவியல் வல்லுநர்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். உலக நாடுகளின் தலைவர்கள் விவாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். இறைபக்தர்கள் கடவுளை வேண்டி வருகின்றனர். சமூக ஆர்வலர்கள் விழிப்புணர்வு பரப்புரை செய்து வருகின்றனர். அரசு சட்டங்களையும் திட்டங்களையும் இயற்றி வருகின்றது.

சாமன்ய மக்களாகிய நாம், நம்மால் இயன்ற எளிய நடவடிக்கைகளாக நாம் என்ன செய்ய போகின்றோம்? பூமிக்கு அடியில் மழை நீரை சேமித்து வைக்கலாம், மரங்களை நட்டு பராமரிக்கலாம், நீர் நிலைகளை பாதுகாக்கலாம், தண்ணீரையும் மின்சாரத்தையும் சிக்கனமாக பயன்படுத்தலாம், இயற்கையான பொருட்களை அதிக அளவில் உபயோகிக்கலாம். குழுக்கூட்டங்களில் இதற்கான தீர்மானத்தை இயற்றலாமே?....

இப்படிக்கு,
(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்

# மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு வரவேற்பு



தமிழ்நாட்டில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக சென்னைக்கு வருகை தந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களை 08.04.2023 அன்று சென்னை விமான நிலையத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பொன்னாடை அணிவித்து, புத்தகம் வழங்கி வரவேற்றார். உடன் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி அவர்கள் உள்ளார்.



தமிழ்நாட்டில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக சென்னைக்கு வருகை தந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களை 08.04.2023 அன்று சென்னை விமான நிலையத்தில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்றார்.

# சென்னை விமான நிலையத்தின்
## புதிய ஒருங்கிணைந்த முனையக் கட்டடம் திறப்பு



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு இந்தியப்பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் 08.04.2023 அன்று சென்னை விமான நிலையத்தின் புதிய ஒருங்கிணைந்த முனையக் கட்டடத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, மாண்புமிகு ஒன்றிய சிவில் விமானத்துறை மற்றும் எஃகுத் துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய மா. சிந்தியா, மாண்புமிகு ஒன்றிய மீன்வளம், கால்நடை வளர்ப்பு மற்றும் பால் வளத்துறை, தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை இணை அமைச்சர் திரு. எல். முருகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## பல்வேறு வழித்தடங்களில் இரயில் சேவை துவக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் 08.04.2023 அன்று செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரத்தில் நடைபெற்ற விழாவில், தாம்பரத்திலிருந்து புறப்படும் தாம்பரம் - செங்கோட்டை அதிவிரைவு இரயில் சேவை மற்றும் திருத்துறைப்பூண்டியிலிருந்து புறப்படும் திருத்துறைப்பூண்டி அகஸ்தியம்பள்ளி DEMU இரயில் சேவை ஆகியவற்றை கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, மாண்புமிகு ஒன்றியசிவில்விமானத்துறைமற்றும்எஃகுத் துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய மா. சிந்தியா, மாண்புமிகு ஒன்றிய இரயில்வே, தகவல் தொடர்பு, மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், மாண்புமிகு ஒன்றிய மீன்வளம், கால்நடை வளர்ப்பு மற்றும் பால் வளத்துறை, தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை இணை அமைச்சர் திரு. எல். முருகன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.ஆர். பாலு ஆகியோர் உள்ளனர்.








# சைகை மொழியில் சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் தொகுப்பினை யூ-டியூப் மூலமாக ஒளிபரப்பு செய்திடும் நிகழ்வு துவக்கம்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 17.04.2023 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் சார்பில் செவித்திறன் குறைபாடுள்ள மாற்றுத் திறனாளிகள் புரிந்து கொள்ளும் வகையில், சைகை மொழியில் சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் தொகுப்பினை யூ-டியூப் மூலமாக ஒளிபரப்பு செய்திடும் நிகழ்வினை மாண்புமிகு சட்டப் பேரவை தலைவர் திரு. மு. அப்பாவு அவர்கள் முன்னிலையில் தொடங்கி வைத்தார். உடன் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு, மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு சட்டப் பேரவை துணைத்தலைவர் திரு. கு.பிச்சாண்டி, அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி. செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., சட்டப் பேரவை செயலாளர் திரு. கி.சீனிவாசன் ஆகியோர் உள்ளனர்.

## பேருந்து பணிமனைகளில் உள்ள உணவகங்களை (Canteen) நடத்துவதற்கு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை

பெண்களுக்கு அதிகாரமளிக்கும் விதமாகவும், தரமான உணவுப் பொருட்களை வழங்குவதில் சுய உதவிக் குழுக்களின் அர்ப்பணிப்பை அங்கீகரிக்கும் விதமாகவும், பேருந்து பணிமனைகளில் உள்ள உணவகங்களை (Canteen) நடத்துவதற்கு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.







## மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் மானியத் தொகையை உயர்த்துதல்

மகளிரின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், முன்னேற்றத்திற்கான அடிப்படை வருவாய் ஈட்டும் தொழில்களை மேற்கொள்ளவும், தற்போது தாட்கோ மூலம் வழங்கப்பட்டு வரும். 2.50 இலட்சம் மானியத் தொகை .6.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும் என ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின் போது அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வாழ்த்து பெறுதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை 30.03.2023 அன்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2023-2024 ஆம் ஆண்டிற்கான ஊரகக் கடன்கள் மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., அவர்கள் உள்ளார்.



## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட புத்தகங்கள் வெளியிடுதல்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 30.03.2023 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட “ஊரக தொழில் முனைவுகளுக்குப் புதிய பாதை” மற்றும் “வறுமையிலிருந்து வளத்தை நோக்கி” புத்தகங்களை வெளியிட்டார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இணைச் செயலாளர் திரு. சந்திர சேகர் சாகமுரி, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

# மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள்

## மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்



மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு அவர்களின் சிறப்பு அழைப்பின் பேரில், நாடு முழுவதும் உள்ள பழங்குடி சமூகங்கள் உட்பட மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் டெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில் உள்ள அம்ரித் உத்யானுக்கு 31.03.2023 அன்று வருகை தந்தனர். மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அனைத்து மாநிலங்களைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களையும் அன்புடன் வரவேற்று அவர்களுடன் கலந்துரையாடினார்.





இந்த கலந்துரையாடலில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் திட்ட செயல் அலுவலர் (பயிற்சி) திருமதி. க. அமுதா அவர்களின் தலைமையில், தமிழ்நாட்டைச் சேர்ந்த சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.



### மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்

அரியலூர் அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் திரு. எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் கலந்து கொண்டு, 334 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. பெ.ரமணசரஸ்வதி இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள், ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை திட்டங்களை தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்களும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ. அமுதா, இ.ஆ.ப., அவர்களும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.





காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சித் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்ற நிலை மற்றும் செயல்பாடுகள் குறித்து தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்களும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அரசு முதன்மை செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., அவர்களும் கள ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் முதற்கட்டமாக குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஆதனூர் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.30.87 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ள நாற்றங்கால் பண்ணை, கரசங்கால் ஊராட்சியில் பெரியார் நினைவு சமத்துவபுரம் பகுதி- 1 திட்டத்தின் கீழ் வீடுகளின் சிறு பழுது மற்றும் வர்ணம் அடிக்கும் பணி மற்றும் இதர கட்டமைப்பு பணிகள் மற்றும் வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள நாற்றங்கால் பண்ணை போன்றவை நேரில் பார்வையிடப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி ஆய்வின்போது வனத்துறையில் உள்ளது போல் 0.45 செ.மீ உயரம் உள்ள உரப்பைகளை ஊரக வளர்ச்சி துறையிலும் பயன்படுத்திட அறிவுரை வழங்கப்பட்டது.

ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் செரப்பனஞ்சேரி ஊராட்சி, ஆரம்பாக்கம் பகுதியில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்கப்பட்டு 640 வீடுகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருவது ஆய்வு செய்யப்பட்டது. மேலும் குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செரப்பனஞ்சேரி ஊராட்சியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் புதியதாக நான்கு வகுப்பறை கொண்ட பள்ளி கட்டடம் கட்டப்படுவதும் ஆய்வு செய்யப்பட்டது.

தொடர்ந்து வைப்பூர் ஊராட்சியில் அம்ரூத் சரோவர் திட்டத்தில் பெரு நிறுவனங்களின் சமூக பொறுப்பு திட்ட நிதியில் திருவரம்புத்தேரியில் சிறு பாசன ஏரி தூர்வாரும் பணி, திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கொளத்தூர் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் ஊராட்சி மன்ற அலுவலக கட்டடம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் கட்டப்பட்டு வரும் பெண்களுக்கான கழிவறை கட்டடம், நாவலூர் காலனி ஆலமரத்தெரு மற்றும் அம்பேத்கர் தெருவில் அமைக்கப்பட்டுள்ள ஃபேவர் பிளாக் சாலைகள் காட்ராம்பாக்கம் பகுதியில் உள்ள பழங்குடியினர் மக்களுக்கு 1.42 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் 31 குடியிருப்புகள் ஆகியவையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆணையர் மரு.தரேஸ் அகமது, இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.மா.ஆர்த்தி, இ.ஆ.ப., திட்ட இயக்குநர் திரு.சா.செல்வகுமார் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.







## தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு

செங்கல்பட்டு மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் செயல்பாடுகளை ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை செயலாளர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் டாக்டர் தரேஸ் அகமது, இ.ஆ.ப., செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ.ஆர். ராகுல்நாத், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித்துறை கூடுதல் இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை திட்ட இயக்குநர், ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், செயற்பொறியாளர் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

ஆய்வின் முதற்கட்டமாக, வண்டலூர் அருகில் உள்ள காவல்துறை அகாடமியில் மகாத்மா மகளிர் சுய உதவிக் குழுவின் சார்பில் இயங்கி வரும் உணவகம் பார்வையிடப்பட்டது. இந்த உணவகத்தின் செயல்பாடுகள் குறித்து ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை செயலாளர் அவர்களுக்கு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்கள் விளக்கமளித்தார். உணவகம் நடத்தும் மகாத்மா சுய உதவிக் குழுவினருடன் கலந்துரையாடிய ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை செயலாளர் அவர்கள், மேலும் சிறப்பாக செயல்பட பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

தொடர்ந்து காட்டாங்கொளத்தூர் தொகுதி, நெடுங்குன்றம் ஊராட்சியில் PMAY திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுவரும் வீடுகள் மற்றும் கல்பனா சாவ்லா பெண்கள் விடுதி ஆகியவை பார்வையிடப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது.

பின்னர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களின் கண்காட்சியைப் பார்வையிட்ட ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை செயலாளர் அவர்கள் அங்கிருந்த சுய உதவிக் குழுவினருடன் பொருட்கள் தயாரிப்பு, விற்பனை மற்றும் சந்தை வாய்ப்புகள் குறித்த விபரங்களை கேட்டறிந்தார்.

இவைகளைத் தொடர்ந்து, கொண்டமங்கலம் ஊராட்சியில் MGNREGS திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள கால்நடை வளர்ப்பு, நாற்றங்கால் பண்ணை, விவசாயிகள் பயன் பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ள கதிரை தளம் ஆகியவை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.











# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் ஆய்வு

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து அனைத்து மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர்களுடனான ஆய்வுக் கூட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில், 20.04.2023 அன்று சென்னை, அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது,

இந்த ஆய்வில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், அவற்றில் அடைந்துள்ள இலக்குகள், 2023-2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளை நடைமுறைப்படுத்த மேற்கொள்ளப்பட்டு வரும் செயல்பாடுகள் போன்றவை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள் திட்டங்களை விரைந்து முடிக்க உரிய ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த ஆய்வின் போது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள், செயல் இயக்குநர் திருமதி. பா.பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர், அனைத்து மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# “சமத்துவ நாள்” உறுதிமொழி ஏற்பு







அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளான ஏப்ரல் திங்கள் 14ஆம் நாளை ஆண்டுதோறும் “சமத்துவ நாள்” ஆக அனுசரிக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற விதி எண் 110ன் கீழ் அறிவித்துள்ளார்கள். இதனைக்கருத்தில்கொண்டு ஆண்டுதோறும் தலைமைச்செயலகம் தொடங்கி, அனைத்து அரசு அலுவலகங்களிலும் “சமத்துவ நாள்” உறுதிமொழி எடுத்திட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

அதன்படி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. பா.பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில், 13.04.2023 அன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன அலுவலகக் கூட்ட அரங்கில் “சமத்துவ நாள்” உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த நிகழ்வில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர், இணை இயக்குநர்கள், உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.





# பெண் தொழில் முனைவோர்களுக்கான நிதியுதவி குறித்த "பயிற்சியாளர்களுக்கான பயிற்சி"

தேசிய ஊரக வாழ்வாதார இயக்க வழிகாட்டுதலின்படி, பெண்கள் தலைமையேற்று நடத்துகின்ற தொழில் தொடர்பாக கடன் பெறுவதில் சந்திக்க நேரிடும் பல சிக்கல்களைக் களைந்து, எளிதில் கடன் பெற ஏதுவான ஒரு சுமூகமான சூழலை உருவாக்கிட வேண்டி, "பயிற்சியாளர்களுக்கான பயிற்சி" நிகழ்ச்சியானது தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு, 2023 மார்ச் மாதம் 21 ம் தேதி முதல் 24 ம் தேதி வரை சென்னையில் நடைபெற்றது. இப்பயிற்சியினை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து சிறப்பித்தார்.

நிதி உள்ளாக்கம் மற்றும் வாழ்வாதார துறைகளைக் (பண்ணை சாரா தொழில்) கவனிக்கும் மாநில அளவிலான அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாவட்ட அளவிலான அலுவலர்கள் என மொத்தம் 100 அலுவலர்கள் இப்பயிற்சி வகுப்பில் பங்கேற்றனர்.

தேசிய இயக்க மேலாண்மை அலகினைச் (NMMU) சார்ந்த குழுவினர், உலக வங்கி ஆலோசகர் மற்றும் பன்னாட்டு நிதிக் கழகத்தைச் (IFC) சார்ந்த பயிற்சியாளர்கள், பெண்கள் தொழில் நிறுவிட தேவைப்படும் நிதி உதவியினைப் பெற கையாள வேண்டிய வழிமுறைகள் குறித்து கலந்துரையாடல்கள் வாயிலாகவும், விளக்கக் காட்சிகள் மூலமாகவும், மாதிரி ஆய்வுகள் மற்றும் எண் பயிற்சி போன்ற பயிற்சி வழிமுறைகளைக் கையாண்டும் பயிற்சி வகுப்புக்களை திறம்பட நடத்தினர்

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் தமிழ்நாட்டில் வெற்றிகரமாக செயல்படும் விதம் குறித்தும், மகளிர் இத்திட்டத்தில் இணைந்து வங்கிக் கடன் பெற்று தொழில் புரிவது குறித்தும் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் பற்றிய முக்கிய சாராம்சங்கள் பற்றியும், இத்திட்டத்தில் பணியாற்றும் அலுவலர்கள் தெளிவாக விளக்கிக் கூறியது பயிற்சியில் பங்கேற்ற அனைவருக்கும் மிகவும் பயனுடையதாக இருந்தது

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தினால் பயனடைந்த பெண் தொழில் முனைவோர் சிலர், அவர்களின் வெற்றிக் கதைகளை இப்பயிற்சி வகுப்பில் பகிர்ந்து அனைவரின் பாராட்டுகளையும் பெற்றனர்

தொழில் முனைவோருக்கான கடன் விண்ணப்பங்கள் எவ்வாறு வங்கியில் பரிசீலிக்கப்படுகிறது, என்னென்ன முக்கிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும், கடன் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படாமல் நிறைவாக எவ்வாறு சமர்ப்பிப்பது போன்ற முக்கிய தகவல்களை ஒரு வங்கி மேலாளரே நேரில் வருகை புரிந்து விளக்கிக் கூறியது பயிற்சிக்கு முத்தாய்ப்பாக அமைந்தது.

நிகழ்ச்சியின் நிறைவு நாளன்று பயிற்சியாளர்களுக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்கள் சான்றிதழ்களை வழங்கினார்.

பெண் தொழில் முனைவோருக்கான நிதி இணைப்புகள் குறித்த அறிவையும் திறமையையும் பெறுவதற்கு இந்த நிகழ்வு ஒரு அற்புதமான கற்றல் வாய்ப்பாக அமைந்தது என்பது பயிற்சியில் பங்கேற்ற அனைவரின் ஒருமித்தக் கருத்தாகும்.



# மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி

கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் கிருஷ்ணகிரி சாந்தி திருமண மண்டபத்தில் நடைபெற்ற மாவட்ட அளவிலான மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சியை 20.03.2023 அன்று மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் அரசு முதன்மைச் செயலர்/ஆணையர் (நிலச் சீர்திருத்தம்) டாக்டர். பீலா ராஜேஷ், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வின் போது, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தீபக் ஜேக்கப், இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் திருமதி. வந்தனா கார்க், இ.ஆ.ப., ஒசூர் மாநகராட்சி ஆணையர் திருமதி. சினேகா, இ.ஆ.ப., கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஜாகீர் உசேன் ஆகியோர் உடனிருந்தனர்.



## தனியார் நிறுவனங்களில் பணிவாய்ப்பு பெற்றுத் தரும் வேலைவாய்ப்பு முகாம்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் தீனதயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சித் (DDU-GKY) திட்டத்தின் சார்பில் 18 வயது முதல் 35 வயது வரை உள்ள படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன்கூடியதொழிற்திறன்பயிற்சிஅளித்து, அவர்களுக்கு பல்வேறு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருதல் மற்றும் சுய தொழில் மேற்கொள்ள வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரும் வகையில் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன.



நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளையில் நாகப்பட்டினம் மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், மாவட்ட வேலைவாய்ப்பு (ம) தொழில் நெறி வழிகாட்டு மையம் ஆகியவை இணைந்து 25.03.2023 அன்று நடத்திய வட்டார அளவிலான தனியார் வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் அ. அருண் தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. என்.கௌதமன் ஆகியோர் தனியார் நிறுவனங்களின் பணி ஆணைகளை வழங்கினர்.




மதுரை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் சார்பில் 29.03.2023 அன்று மேலூர் மற்றும் கொட்டாம்பட்டியிலும், 30.03.2023 அன்று மதுரை கிழக்குப் பகுதியிலும் வட்டார அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் நடைபெற்றன.

மதுரை மாவட்டத்தில் செயல்படும் தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்ட இம்முகாமில் ஏராளமான இளைஞர்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்டனர். மதுரை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு.எம்.காளிதாசன் அவர்கள் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இம்முகாமில், வாழ்ந்து காட்டுவோம் திட்ட மாவட்ட செயல் அலுவலர், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார இயக்க மேலாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்**

## திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்

**தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஊரகக் கடன்கள் மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் துறையின் 2023-2024ஆம் நிதியாண்டிற்கான நிதி நிலையறிக்கையில் மகளிரின் பொருளாதார முன்னேற்றத்திற்காக அறிவித்த அறிவிப்புகள்**



மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 30.03.2023 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் ஊரகக் கடன்கள் மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் துறையின் மானியக் கோரிக்கையின் போது, தமிழ்நாட்டில் மகளிர் மேம்பாட்டிற்கான புதிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். அதன் விபரம் வருமாறு.




**45,000 கிராமப்புற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி 145 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

திறன் பயிற்சியானது கிராமப்புற இளைஞர்களின் திறனை மேம்படுத்தி வேலை வாய்ப்பு பெறுவதற்கான தகுதியை உருவாக்கி வேலைவாய்ப்புகளை உறுதி செய்கிறது. இந்த ஆண்டு 20,000 கிராமப்புற இளைஞர்களுக்கு 120 கோடி ரூபாய் செலவில் திறன் பயிற்சி வழங்கப்படும். மேலும், சுய தொழிலை ஊக்குவிக்கும் வகையில் 25,000 இளைஞர்களுக்கு திறன் பயிற்சி 25 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**5,000 சுய உதவிக் குழுக்களுக்கு 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும்.**

சுய உதவிக் குழுக்கள் மற்றும் அதன் உறுப்பினர்களின் தொழில் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக சமுதாய முதலீட்டு நிதியை பொருளாதார கடன் உதவியாக வழங்கப்படும். இந்த ஆண்டு 5,000 சுய உதவிக் குழுக்களுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலமாக சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும். இதற்காக மொத்த தொகை 75 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.







**சுய உதவிக் குழுக்களால் நடத்தப்படும் 7,500 நுண் மற்றும் குறு தொழில் நிறுவனங்கள் 50 கோடி ரூபாய் செலவில் வலுப்படுத்தப்படும்.**

சுய உதவிக் குழு மகளிரால் நடத்தப்படும் தொழில் நிறுவனங்கள் கடன் பெறுவதில், புதிய தொழில் நுட்பங்களை மேற்கொள்வதில், விதிமுறைகளை கடைபிடித்தல் மற்றும் டிஜிட்டல் தளங்களில் விற்பனை செய்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றன. சுய உதவிக் குழு பெண்களால் நடத்தப்படும் 7,500 நுண் மற்றும் குறு தொழில்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களின் நிதி மற்றும் இதர தேவைகளின் அடிப்படையில் உதவிகள் வழங்கப்படும். இதற்காக வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

**ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் 9 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவில் புத்தாக்கப் பயிற்சி வழங்கப்படும்.**

சுய உதவிக் குழு உறுப்பினர்களின் தகுதி மற்றும் திறமையை மேம்படுத்த அடிப்படை பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு நிர்வாகம், நிதி மேலாண்மை மற்றும் தலைமைப்பண்பு ஆகியவற்றில் மகளிர் குழுக்களுக்கு சிறப்பு புத்தாக்கப் பயிற்சி 9 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும். இத்துடன் அரசின் பல்வேறு திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படும்.






**1,000 கிராம ஊராட்சிகளில் உள்ள மகளிர் புதிய தொழில் தொடங்குவதற்கும் ஏற்கனவே உள்ள தொழிலை மேம்படுத்துவதற்கும் நுண் தொழில் நிறுவனங்களுக்கான நிதி திட்டம் (Nano Enterprise Financing Fund) 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஊரக மகளிருக்கு தொழில் தொடங்குவதற்கு பல்வேறு உதவிகள் புரிந்து வருகிறது. இந்த ஆண்டு மகளிர் புதிதாக தொழில் தொடங்குவதற்கும், ஏற்கனவே செய்து வரும் தொழிலை விரிவுபடுத்துவதற்கும் 1,000 கிராம ஊராட்சிகளில், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் "நுண் தொழில் நிறுவனங்களுக்கான நிதி திட்டம்" 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**ஊரகப் பகுதிகளில் 10,000 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, 15 கோடி ரூபாய் சுழல் நிதி வழங்கப்படும்.**

மகளிர், ஏழைகள் மற்றும் நலிவுற்றோர் சமூக பொருளாதார மேம்பாடு அடைய சுய உதவிக் குழுக்கள் சிறந்த அமைப்பாக உருவாகி உள்ளது. இவர்கள் அரசின் பல்வேறு திட்டங்களின் மூலம் பயன்களையும் அடைந்துள்ளார்கள். இந்த ஆண்டு, மக்கள் நிலை ஆய்வு பட்டியலில் விடுபட்ட மகளிர் குடும்பங்களைக் கொண்டு 10,000 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும். புதிதாக உருவாக்கப்படும் குழுக்களுக்கு சுழல் நிதியாக 15,000 ரூபாய் வீதம் மொத்தம் 15 கோடி ரூபாய் வழங்கப்படும்.







**அனைத்து மாவட்டங்களிலும் உள்ளூர் வல்லுநர்களை கொண்டு ஊரக இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க 1,000 புதிய சமுதாய திறன் பள்ளிகள் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.**

உள்ளூர் மற்றும் பாரம்பரிய தொழிலில் ஈடுபட்டுள்ள செயல் வல்லுநர்கள்/ நிபுணர்களை கண்டறிந்து அவர்களின் மூலம் அதே கிராமத்தில்/வட்டாரத்தில் சமுதாயத் திறன் பள்ளிகளை அமைத்து, ஊதியம் மற்றும் சுயதொழில் தொடங்குவதற்கு, ஆர்வமுள்ள இளைஞர்களை கண்டறிந்து தொழிற்பயிற்சிகள் அளிக்க, ஒவ்வொரு சமுதாய திறன் பள்ளிக்கும் 70 ஆயிரம் ரூபாய் முதல் 1 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படும். நடப்பாண்டில் அனைத்து மாவட்டங்களிலும் 1,000 புதிய சமுதாய திறன் பள்ளிகள் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதற்காக மாநில மற்றும் மாவட்ட அளவில் "வாங்குவோர்–விற்போர்" (Buyer-seller) சந்திப்புகள் 2 கோடியே 5 ஆயிரம் ரூபாய் செலவில் நடத்தப்படும்.**

'வாங்குவோர் - விற்போர்' சந்திப்புகளை நடத்துவதற்கு முறையான அமைப்புகள் இல்லாததால் சுய உதவிக் குழு உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு வாய்ப்புக்கள் குறைவாக உள்ளது. அதற்கான சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்காக மாநில மற்றும் மாவட்ட அளவில் காலாண்டிற்கு ஒரு முறை "வாங்குவோர் - விற்போர்" சந்திப்புகள் 2 கோடியே 5 ஆயிரம் ரூபாய் செலவில் நடத்தப்படும்.







**மீட்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களின் மறுவாழ்விற்காக பொருளாதார கூட்டமைப்புகள் 7 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.**

கொத்தடிமையாக இருந்து விடுவிக்கப்பட்ட குடும்பங்களில் உள்ளவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக சிறப்பு சுய உதவி குழுக்கள் அமைக்கப்பட்டு அவர்கள் ஏற்கனவே கூலி தொழிலாளர்களாக ஈடுபட்டிருந்த அதே தொழில்களில், தொழில் முனைவோர்களாக உருவாக்க 7 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் பொருளாதார கூட்டமைப்புகள் அமைக்கப்படும்.




**100 முக்கிய சுற்றுலா தலங்களில் சுய உதவிக் குழுக்களின் பொருட்களை விற்பனை மற்றும் காட்சிப்படுத்த 'மதி அங்காடிகள்' 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.**

சுய உதவிக் குழுக்களின் பாரம்பரிய மற்றும் தனித்துவமான பொருட்களை சுற்றுலா தலங்களுக்கு வரும் தேசிய மற்றும் சர்வதேச சுற்றுலா பயணிகள் வாங்குவதற்கு மாநிலத்தின் 100 முக்கிய சுற்றுலா தலங்களில் 'மதி அங்காடிகள்' 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**'ஒரு வட்டாரம் ஒரு உற்பத்தி பொருள்' (One Block One Product) எனும் திட்டம் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை மதிப்பு கூட்டி, சந்தைப்படுத்த ஏதுவாக பொது சேவை மையம் (Common Facility Centre) 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

'ஒரு வட்டாரம் ஒரு உற்பத்திப் பொருள்' எனும் திட்டம் வட்டார அளவில் அதிக எண்ணிக்கையிலான சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் ஒரு பொருளைக் கண்டறிந்து, மதிப்பு கூட்டி, மதி முத்திரையில் சந்தைப்படுத்த ஏதுவாக பொதுசேவை மையங்கள் 50 வட்டாரங்களில் முன்மாதிரியாக 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.







**சிறப்பு சுய உதவிக் குழு உறுப்பினர்களின் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்ய 100 'மதி எக்ஸ்பிரஸ்' வாகனங்கள் 3 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர்களுக்காக சிறப்பு சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படுகிறது. இவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி வருமானத்தை பெருக்குவதற்காக பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. மகளிர் குழுக்கள் தயாரிக்கும் பொருட்கள் மற்றும் பொது மக்களுக்கு தேவையான இதர பொருட்களை மின் வாகனம் (e-Cart) மூலம் விற்பனை செய்து வருமானத்தை பெருக்கிட 100 நகரும் 'மதி எக்ஸ்பிரஸ்' வாகனங்கள் 3 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**37 மாவட்டங்களிலும் முன் மாதிரியாக "வானவில் மையம்" எனும் பாலின வள மையம் 1 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

சமூகத்தில் பின்தங்கிய பெண்கள் மற்றும் வளரிளம் பெண்கள் உடல்நலம் மற்றும் சமூகம் சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இதற்கு தீர்வு காணும் வகையில் முன்மாதிரியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வட்டாரத்தில் 'வானவில்' பாலின வள மையம் உருவாக்கப்பட்டு ஊட்டச்சத்து, உடல் மற்றும் மன நலம், குழந்தை திருமணம், குடும்ப வன்முறை மற்றும் பாலியல் வன்கொடுமை போன்ற பெண்கள் தொடர்பான சமூகப் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தி தீர்வு காண வழிவகை செய்யப்படும். இதற்காக இந்த ஆண்டு 1 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 37 "வானவில் மையம்" உருவாக்கப்படும்.







**மகளிர் உற்பத்தியாளர் குழுக்கள் மூலம் 100 சான்றளிக்கப்பட்ட சிறுதானிய விதை உற்பத்தி அலகுகள் 2 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.**

கடந்த ஆண்டு சுய உதவிக் குழுக்கள் மூலம் அமைக்கப்பட்ட 100 சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தி அலகுகள் உறுப்பினர்களுக்கு வருவாயை ஈட்டிக் கொடுத்தது மட்டுமல்லாமல், விவசாயிகளுக்கு உயர்தர விதைகள் கிடைப்பதையும் உறுதி செய்தது. சர்வதேச சிறுதானிய ஆண்டை முன்னிட்டு, சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த மகளிர் மூலம் 100 சான்றளிக்கப்பட்ட சிறுதானிய விதை உற்பத்தி அலகுகள் 2 கோடி ரூபாய் செலவில் அமைக்க ஊக்குவிக்கப்படும்.




**சர்வதேச சிறுதானிய ஆண்டை முன்னிட்டு 37 மாவட்ட பெருந்திட்ட வளாகங்களில் மகளிர் குழுக்கள் 'சிறுதானிய உணவகங்கள்' (Millets Café) நடத்திட 1 கோடியே 85 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.**

இந்த ஆண்டு சர்வதேச சிறுதானிய ஆண்டாக கொண்டாடப்படுவதை முன்னிட்டு ஊட்டச்சத்து நிறைந்த சிறுதானிய உணவுகளை பற்றிய விழிப்புணர்வை, மக்களிடையே ஏற்படுத்தி அவைகளை உட்கொள்ளுவதை ஊக்கப்படுத்தும் விதமாக மகளிர் சுய உதவி குழுக்களை கொண்டு 37 மாவட்ட பெருந்திட்ட வளாகங்களில் மதி 'சிறுதானிய உணவகங்கள்' 1 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திட ஊரக பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட சுய உதவிக் குழு மகளிருக்கு சமையல் செய்முறை பயிற்சி 1 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

முதலமைச்சரின் காலை உணவு திட்டமானது சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையுடன் ஒருங்கிணைந்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் அனைத்து மாவட்டங்களின் ஊரக பகுதிகளில் விரிவாக்கம் செய்யப்படவுள்ளது. கிராம அளவிலான மைய குழுவால் அடையாளம் காணப்படும் சுய உதவி குழு மகளிருக்கு காலை உணவு சமையல் செய்முறை பயிற்சிகள் 1 கோடி ரூபாய் மதிப்பில் வழங்கப்படும்.







**அனைத்து மாவட்டங்களிலும் 100 இளைஞர் திறன் மற்றும் வேலை வாய்ப்பு திருவிழாக்கள் 1 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும்.**

ஊரக இளைஞர்களுக்கு திறன் குறித்த போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்தி படித்த திறன் பெற்ற இளைஞர்களுக்கு தகுதியின் அடிப்படையில் வேலைகளை பெற்றுத் தந்திட இளைஞர் திறன் மற்றும் வேலை வாய்ப்பு திருவிழாக்கள் நடத்தப்படும். இதில் இளைஞர்களுக்கு திறன் மற்றும் திறனுக்கேற்ற வேலை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்கள் சரியான தொழிற்பயிற்சி அல்லது வேலை வாய்ப்பு பெறுவதற்கு அனைத்து மாவட்டங்களிலும் 1 கோடி ரூபாய் செலவில் 100 இளைஞர் திறன் மற்றும் வேலை வாய்ப்பு திருவிழாக்கள் நடத்தப்படும்.

**ஊராட்சி மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்புகளின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நிதியினை கண்காணித்திட ஒரு மின்னணு தளம் உருவாக்கப்படும்.**

சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஊராட்சி மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்புகள் மூலம் வழங்கப்படும் நிதி மற்றும் வங்கிப் பெருங்கடன் ஆகியவை குழுக்களுக்கு முறையாக சென்றடைவதை கண்காணித்து நிதி நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய ஒரு மின்னணு தளம் உருவாக்கப்படும்.



**சமுதாய வளப் பயிற்றுநர்களின் (CRPs) திறனை மேம்படுத்துவதற்காக கற்றல் மேலாண்மை அமைப்பு (Learning Management System) எனும் மின்னணு தளம் உருவாக்கப்படும்.**

வறுமை ஒழிப்புத் திட்டங்களை ஊராட்சி அளவில் சிறப்பாக செயல்படுத்துவதில் சமுதாய வள பயிற்றுநர்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றனர். திட்டத்தின் பல்வேறு கூறுகளை சிறப்பாக செயல்படுத்த அவர்களின் அறிவு, திறமை மற்றும் அணுகுமுறையை தொடர்ந்து மேம்படுத்த வேண்டியுள்ளது. இதற்காக கற்றல் மேலாண்மை அமைப்பு எனும் மின்னணு தளம் உருவாக்கப்படும்.

மகளிரின் வாழ்வாதாரத்தில் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வகையில் மேற்கண்ட அறிவிப்புகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

# மகளிர் திட்டத்தால் கிடைத்த தொழில் வளர்ச்சி

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டாரம், கோனை ஊராட்சியில் வசித்து வரும் எனது பெயர் மாரியம்மாள். பேக்கரியில் வேலை செய்து வரும் எனது கணவர் கொண்டு வரும் வருமானத்தைக் கொண்டு குடும்பத்தை நடத்தி வந்தேன். என் கணவருக்கு பேக்கரித் தொழிலில் 8 ஆண்டு காலம் அனுபவம் இருந்ததால், சொந்தமாக பேக்கரி துவங்கலாம் என்று நானும் என் கணவரும் யோசித்து முடிவெடுத்தோம். அதனைத் தொடர்ந்து சிறிய அளவில் பேக்கரி கடை ஒன்றை தொடங்கி நடத்தி வந்தோம். நானும் பேக்கரி தொழிலைக் கற்றுக் கொண்டேன்.

இந்நிலையில் எங்களது பேக்கரி கடையை விரிவுபடுத்திட நினைத்தோம். ஆனால் அதற்கான மூலதனம் இல்லாமல் சிரமப்பட்டு வந்தோம். இந்த நிலையில் எங்கள் பகுதியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் தொடக்கப்பட்ட ரோஜா மகளிர் சுய உதவிக் குழுவில் நான் இணைந்தேன். குழுவின் மூலம் கடன் பெற விண்ணப்பித்தேன். நான் வசிக்கும் ஊராட்சியில் உள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் நிர்வாகிகள் உடன் மகளிர் திட்ட அலுவலர்கள் எனது விண்ணப்பத்தினை பரிசீலனை செய்ததுடன், எனது கடைக்கே நேரடியாக வந்து ஆய்வு செய்தனர்.

ஆய்வின் போது “எனது பேக்கரியில் கைகளால் பிஸ்கட் தயாரிப்பதால் குறைவான அளவே தயாரிக்க முடியும் என்றும், அதிக அளவிலான பொருட்களைத் தயாரிக்கும் இயந்திரம், அச்சு வாங்குவதற்கு குறைந்தபட்சம் 6 இலட்சம் ரூபாய் தேவைப்படும்” என்று ஆய்விற்கு வந்த குழு உறுப்பினர்களிடம் தெரிவித்தேன்.

இதனைத் தொடர்ந்து பாரத பிரதமர் உணவுபதப்படுத்தும் சிறு நிறுவனங்களை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் கடனுதவி பெற, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் நிர்வாகிகள் மற்றும் மகளிர் திட்ட அலுவலர்கள் மூலம் விண்ணப்பித்தேன். எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு எனக்கு மானியத்துடன் வங்கிக் கடன் பெற்றுத் தந்தனர். அந்தத் தொகையைக் கொண்டு எனது பேக்கரிக்குத் தேவையான இயந்திரம் மற்றும் அச்சுகளை வாங்கினேன்.

இயந்திரத்தின் மூலம் பேக்கரி பொருட்களைத் தயாரிப்பதால் அதிக அளவில் பொருட்களைத் தயாரிக்க முடிகிறது. இதன் மூலம் நாளொன்றுக்கு செலவினம் மற்றும் கூலி போக நிகர இலாபமாக ரூ. 2500/- வரை கிடைக்கிறது.

எங்களது பேக்கரியில் கேழ்வரகு பிஸ்கட், தினை பிஸ்கட், தேங்காய் பால் பிஸ்கட், நிலா பிஸ்கட் போன்ற பல தின்பண்டங்களைத் தயாரித்து, உள்ளூர் மற்றும் மேல்மருவத்தூர், மேல் மலையனூர் போன்ற இடங்களை அதிக அளவில் விற்பனை செய்து வருகிறோம். எங்களின் வளர்ச்சிக்கு உதவிய ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கும், தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கத்திற்கு எனது இதயம் கனிந்த நன்றிகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**– மாரியம்மாள்,** விழுப்புரம் மாவட்டம்







## சுய உதவிக் குழு மகளிரின் ஸ்ரீ புதுமாரியம்மன் துணிக்கடை

மதுரை மாவட்டம், சேடப்பட்டி ஒன்றியம், சின்னக்கட்டளை ஊராட்சியை சேர்ந்த மதுர காளியம்மன், காந்திஜி, அன்னை தெரசா மற்றும் ரோஜா ஆகிய நான்கு சுய உதவிக் குழுவிலுள்ள தலா 3 உறுப்பினர்கள் ஒன்றிணைந்து “ஸ்ரீ புதுமாரியம்மன்” என்ற பெயரில் துணிக்கடை நடத்தி வருகிறார்கள்.



மொத்த முதலீட்டு தொகையான ரூ.6,00,000/-த்தில். ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் கடனாக ரூ.3,00,000/- பெறப்பட்டுள்ளது. மூன்று மாதத்திற்கு ரூ.1,00,000/- மதிப்பில் கடைக்குத் தேவையான பொருட்கள் கொள்முதல் செய்யப்படுகிறது. ரூ.50,000/- க்கு விற்பனை செய்தால் ரூ.17,000/- இலாபமாக கிடைக்கிறது. சாதாரண குழு உறுப்பினர்களாக இருந்தவர்கள் தற்போது தொழில் முனைவோர்களாக மாறியுள்ளனர்.

வீட்டின் குடும்ப பொறுப்பை மட்டும் நிர்வாகித்துக் கொண்டிருந்த தங்களை தொழில் முனைவோர்களாக முன்னேற்றி வாழ்வாதாரத்தை உயர்த்திய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், சின்னக்கட்டளை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கும், காளியம்மன், காந்திஜி, அன்னை தெரசா மற்றும் ரோஜா ஆகிய நான்கு சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களும் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



## வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றி...

என் பெயர் மகேஸ்வரி (க/பெ முருகேன்), நான் சேலம் மாவட்டம், சேலம் வட்டாரம், ஆண்டிப்பட்டி ஊராட்சியில் செயல்படும் சாலமரத்து வட்டம் மகளிர் சுய உதவிக் குழுவில் 11 வருடங்களாக உறுப்பினராக இருந்து வருகிறேன். எனது கணவரின் குறைவான வருமானத்தை மட்டும் எதிர்பார்த்து எங்களுடைய குடும்பம் வறுமையின் பிடியில் இருந்தது. கணவருக்கும் வேலைக்கு செல்ல இயலாத நிலை ஏற்பட்டது. எனது குழந்தைகள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் அத்தியாவசிய தேவைகளை கூட பூர்த்தி செய்ய முடியாமல் கடன் பெற்று அதை திரும்ப செலுத்த முடியாமல் மிகவும் மன உளைச்சலுக்கு ஆளானேன்.

எனது குடும்ப தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், நான் பெற்றுள்ள கடனை அடைப்பதற்கும் என்னை போல வறுமையில் உள்ள மற்ற குடும்ப பெண்களின் குடும்ப வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கும் எனது வீட்டிற்கு அருகில் உள்ள பெண்களை ஒருங்கிணைத்து மகளிர் திட்டத்தின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுவினை அமைத்து, சேலம் இந்தியன் வங்கியில் குழுவின் பெயரில் சேமிப்புக் கணக்கை துவங்கி, எங்கள் சேமிப்பின் வழியே சிறிய அளவில் கடன் பெற்றோம்.



- மகேஸ்வரி

எங்களது சுய உதவிக் குழுவில் சேமிக்கப்பட்ட தொகையினை வங்கியில் முறையாக செலுத்தி வரவு செலவுகளை மேற்கொள்ளலாம் என முடிவு செய்தோம். எங்கள் சேமிப்பு அடிப்படையில் நேரடி கடனாக இரண்டு இலட்சம் ரூபாய் பெற்று, வெள்ளி கொலுசு முனைதல் தொழில் செய்து அதன் மூலம் வருமானத்தை பெருக்கிக் கொண்டேன். மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலில் சுய உதவிக் குழுவில் இணைந்ததின் மூலம் என்னுடைய குடும்ப பொருளாதார நிலை மேம்பட்டு குழந்தைகளின் கல்வி வளர்ச்சியும் மேம்பாடு அடைந்துள்ளது. இந்த சுய தொழில் செய்வதன் மூலம் போதிய வருமானமும், மன நிறைவும், சமூக அந்தஸ்தும் கிடைக்கிறது. எனது வளர்ச்சிக்கு உதவிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# இயற்கை வேளாண்மைப் பொருட்களை விற்பனை செய்யும் மகளிர் திட்ட விவசாயிகளின் நம் சந்தை

வேலூர் மாவட்டத்தில் மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலில் கணியம்பாடி வட்டாரத்தில் மூன்று குழுக்களாக இயற்கை விவசாய தொகுப்பு ஊக்குவிக்கப்பட்டது. ஆர்வமுள்ள 300 மகளிர் விவசாயிகள் 3 குழுக்களாக தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு மண்டல கவுன்சில், இயற்கை வேளாண்மை நிறுவனம், பிஜிஎஸ் சான்றிதழ் துறையின் மூலம் இயற்கை விவசாயம் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டதுடன், இயற்கை வேளாண்மை பற்றிய கண்டுணர் பயணம் மேற்கொள்ளப்பட்டது. மேலும் அங்கக வேளாண் பொருட்களை உற்பத்தி செய்ய அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த இயற்கை வேளாண்மை தொகுப்பிற்கு ஆதரவாக, இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து விவசாய விளைபொருட்களையும் ஒரே இடத்தில் விற்பனை செய்ய மகளிர் திட்ட அலுவலர்கள் திட்டமிட்டு வேலூர் பூமாலை வணிக வளாகத்தில் நம் சந்தை ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணி முதல் 11.00 மணி வரை உற்பத்தி பொருட்கள் சந்தைப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

இந்த நம் சந்தையின் தனிச்சிறப்பு என்னவென்றால், மகளிர் திட்டம் வேலூர் மாவட்டத்தை சேர்ந்த பெண் விவசாயிகள் இயற்கை முறையில் பயிரிடப்பட்ட வேளாண் பொருட்களை விற்பனை செய்வதுதான். ஒவ்வொரு வாரமும் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் வந்து விற்பனை செய்து வருகின்றனர். இதனால் விவசாயிகள் தங்களது விளைபொருட்களை இடைத்தரகர்கள் இன்றி நுகர்வோருக்கு விற்பனை செய்ய வாய்ப்பளிக்கிறது.

பருவகால வேளாண் விளைபொருட்கள் பெண் விவசாயிகளால் நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படுகிறது. விவசாயிகள் வெல்லம், நிலக்கடலை எண்ணெய், எள் எண்ணெய், தேங்காய் எண்ணெய் உள்ளிட்ட மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களையும் நம் சந்தையில் விற்பனை செய்து வருகின்றனர். மேலும் கருடன் சம்பா, கருப்பு கவுனி, மாப்பிள்ளை சம்பா, வாசனை சீரக சம்பா, மைசூர் மல்லி (மெருகூட்டாமல்) போன்ற பாரம்பரிய அரிசிகளும் நம் சந்தையில் விற்கப்படுகிறது. சாமை அரிசி, வரகு, தினை, ராகி (ராகி பொடி) போன்ற சிறு தானியங்களும் விற்பனை செய்யப்படுகின்றது. தினையிலிருந்து தயாரிக்கப்பட்ட பிஸ்கட்களும், தூதுவளை, மொடக்காத்தான், வல்லாரை போன்ற மருத்துவ தாவரங்கள், இதர மூலிகை கீரைகள், இயற்கை முறையில் விளைந்த சிறு கீரை, அரைக்கீரை, பருப்பு கீரை, பொன்னாங்கண்ணி கீரை, பசலை கீரைகள் நம் சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது.



நம் சந்தை தற்பொழுது வெற்றிகரமாக 40-45 பெண் விவசாயிகளுடன் சுழற்சி முறையில் இயங்கி வருகிறது, 300 முதல் 400 வரையிலான வாடிக்கையாளர்கள் தொடர்ந்து நம் சந்தையை பார்வையிடுகின்றனர். சராசரியாக இந்த நம் சந்தையில் கடை வைத்துள்ள விவசாயிகள் ரூ.300/- முதல் ரூ.5000/- வரை வருவாய் பெற்று வருகின்றனர்.







## வணிகம் வளர்க...

# திண்டுக்கல் மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களின் சுவையான உணவுப் பொருட்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், தரமான பொருட்கள் பலவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களை அனைவரும் அறிந்து கொள்ளவும், அவற்றிற்கான சந்தை வாய்ப்புகளை அதிகரித்திடவும் மாதந்தோறும் முற்றம் இதழில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் குறித்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

## திண்டுக்கல் மாவட்டம்

| சுய உதவிக் குழுவின் பெயர் | தயாரிப்புப் பொருளின் பெயர் | |
|---|---|---|
| ஷைன் மகளிர் சுய உதவிக் குழு,<br>கூட்டாத்துப்பட்டி ஊராட்சி,<br>ரெட்டியார் சத்திரம் வட்டாரம்,<br>திண்டுக்கல் மாவட்டம்.<br>கைபேசி : 99431 14264 | சமையல் பொடிகள் மற்றும் கடலை எண்ணை, தேங்காய் எண்ணை |  |
| செம்மொழி மகளிர் சுய உதவிக் குழு,<br>வி.மாங்குபென்தான்பட்டி கிராமம்,<br>ஈ.சித்தூர் ஊராட்சி, வேடசந்தூர் (தா),<br>திண்டுக்கல் மாவட்டம்.<br>கைபேசி : 96268 19640 | சிறுதானிய தின்பண்டங்கள் |  |
| கஸ்தூரிபாய் மகளிர் சுய உதவிக் குழு,<br>எருமைநாயக்கன்பட்டி ஊராட்சி,<br>பழனி வட்டாரம், திண்டுக்கல் மாவட்டம்.<br>கைபேசி : 96268 29707 | ஊறுகாய் வகைகள் |  |
| மகிழம் பூ மகளிர் சுய உதவிக் குழு,<br>வில்பட்டி கிராமம், பல்லான்கி ஊராட்சி,<br>கொடைக்கானல் வட்டாரம்,<br>திண்டுக்கல் மாவட்டம்.<br>கைபேசி : 95244 24295 | வீட்டுத் தயாரிப்பு சாக்லேட்டுகள் |  |
| ஸ்ரீ வீரமாத்தி மகளிர் சுய உதவிக் குழு,<br>ஆடலூர் ஊராட்சி,<br>ரெட்டியார் சத்திரம் வட்டாரம்,<br>திண்டுக்கல் மாவட்டம்.<br>கைபேசி : 82482 55978 | மசாலாப் பொருட்கள் |  |

# வாழ்வாதாரத்தை மேம்படுத்திய இயக்கம்

ஈரோடு மாவட்டம், லக்கம்பட்டி பேரூராட்சியில் வசித்து வரும் சாந்தமீனா, கலைச்செல்வி ஆகிய நாங்கள் இருவரும் 15 வருடங்களாக கடலைப் பருப்பு, வெல்லம், எள் ஆகியவற்றை சிறிய அளவில் வாங்கி, இடித்து மாவு உருண்டையாக செய்து வியாபாரம் செய்து வந்தோம். இந்நிலையில் எங்களது பகுதியில் உள்ள சமுதாய அமைப்பாளர் மகளிர் சுய உதவிக் குழுவினைப் பற்றியும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் பயன்கள் பற்றியும் கூறிக் கொண்டிருந்தார். எங்கள் பகுதியில் 10 நபர்களை இணைத்து புதிய ஆண்டில் எங்கள் வாழ்வாதாரம் மலரட்டும் என எண்ணி 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஸ்ரீ ராம் மகளிர் சுய உதவிக் குழு என்ற குழுவினை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் ஆரம்பித்தோம். குழுவில் நான் ஊக்குநராக இணைந்தேன்.

எனக்கு திருமணமாகி ஒரு ஆண் குழந்தை உள்ளது. நான் கணவருடன் இல்லாமல் தனித்து பணிக்கு செல்ல முடியாத நிலைமையில் எனது குழந்தையினை வளர்க்க வீட்டில் இருந்த படியே இந்த சிறு தொழிலை செய்து வந்தேன். ஊக்குநர் பிரதிநிதி பயிற்சி மற்றும் உறுப்பினர் பயிற்சியில் கலந்து கொண்ட பின்பு எங்கள் குழுவிற்கு சுழல் நிதியாக வழங்கப்பட்ட ரூ.10,000/-த்தை உள்கடனாக பயன்படுத்தி வந்தோம். தொடர்ந்து 21.01.2022 அன்று ரூ.2,00,000/- வங்கிக் கடன் வழங்கப்பட்டது. இத்தொகையினை வைத்து எங்களது பொருட்களின் உற்பத்தியினை அதிகமாக்கினோம். எங்களது தயாரிப்பினை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் அலுவலர்கள் பார்வையிட்டு எங்களை மேலும் ஊக்கப்படுத்தினர்.

எங்களது பேரூராட்சி பகுதியில் உள்ள குழுக்களை ஒன்றிணைத்து புதியதாக கூட்டமைப்பு அமைக்கலாம் என கூட்டம் நடத்தப்பட்டு அதன் பயன்களை அறிந்து அதில் எங்களது குழுவினை உறுப்பினராக்கினோம். பாரதப் பிரதமரின் மைக்ரோ உணவு பதப்படுத்தும் திட்டத்தில் கூட்டமைப்பின் மூலம் கடன் பெற்று தொழிலை மேம்படுத்தும் நோக்கில் எங்களது சமுதாய அமைப்பாளர் எங்களை அணுகி இத்திட்டத்தினை விளக்கி எங்களது குழுவில் சந்தகை உற்பத்தி செய்பவருக்கு ரூ.40,000/-மும், கடலை உருண்டை உற்பத்தி செய்வதற்கு ரூ.80,000/-மும் கடன் பெற்று தந்தார். இதன் மூலம் எங்களது உற்பத்தியை அதிகப்படுத்தினோம்.

எங்கள் தயாரிப்பிற்கு 'ஸ்ரீ ராம் கடலை உருண்டை" என எங்கள் குழுவின் பெயரை வைத்து சிறப்பாக நடத்தி வருகிறோம். பெரிய நிறுவனங்கள் கூட எங்கள் கடலை உருண்டையினை வாங்கி விற்பனை செய்கின்றனர். கல்லூரிகளில் நடக்கும் காலேஜ் பஜார்களிலும், சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற சுய உதவிக் குழு உற்பத்தி பொருள் விற்பனை கண்காட்சியிலும் பங்கு கொள்ள வாய்ப்பளித்து எங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கும், அதன் அலுவலர்களுக்கும் எங்களது நன்றியினை உரித்தாக்குகிறோம்.





## மகளிர் ஆட்டோ ஓட்டுநர் சுய உதவிக் குழு



நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் நகராட்சி பகுதியில் மகளிர் ஆட்டோ ஓட்டுநர்களை ஒருங்கிணைத்து மகளிர் ஆட்டோ ஓட்டுநர்கள் சுய உதவிக் குழு ஆரம்பிக்கப்பட்டது. இக்குழுவிற்கு நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி நகர கிளையின் மூலமாக நேரடி கடனாக ரூ.3,00,000/- வழங்கப்பட்டது.

இந்நிலையில் இரண்டாவது கொரோனா ஊரடங்கின் போது நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி உதகமண்டலம் நகராட்சி பகுதியில் ஸ்ரீ சங்கமம் கூட்டமைப்பின் சார்பாக மகளிர் ஆட்டோ ஓட்டுநர்கள் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் மூலம் நடமாடும் காய்கறி விற்பனை வாகனங்கள் இயக்கப்பட்டது. இதனால் இக்குழுவின் உறுப்பினர்களின் வாழ்வாதாரம் வளர்ச்சி அடைந்தது.

தங்களின் வாழ்க்கை தரம் உயர ஆக்கமும், ஊக்கமும் கொடுத்ததோடு, தங்களின் செயல்பாடுகளுக்கு என்றும் துணை நிற்கும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு மகளிர் ஆட்டோ ஓட்டுநர்கள் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## கால்நடைகளுக்கான தீவனம் தயாரித்தல்

என் பெயர் யாஸ்மின், கோயமுத்தூர் மாவட்டத்தில் வசித்து வரும் எனக்கு இரண்டு ஆண் குழந்தைகள் உள்ளனர். எனது வாழ்வாதார தேவைகளுக்காக, துணி மற்றும் கவரிங் நகைகளை மொத்த விலைக்கு கடைகளில் வாங்கி, வீட்டிற்கு அருகில் உள்ள பகுதிகளில் விற்பனை செய்து வந்தேன். எங்கள் பகுதியில் உள்ள சமுதாய அமைப்பாளரின் மூலம் எங்கள் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுவில் இணைந்தேன். நான் செய்து வந்த தொழிலில் எனக்கு போதுமான வருவாய் கிடைக்காததால், வேறு தொழில் செய்யலாம் என தீர்மானித்தேன்.

இந்நிலையில், அரபு நாடுகளில் பேரீச்சம் பழக் கொட்டைகளை ஊற வைத்து, அதன் மூலமாக கால்நடைகளுக்கான தீவனம் தயாரிக்கப்படுவதை இணையத்தின் மூலம் அறிந்து, அந்தத் தொழிலை செய்யலாம் என முடிவு செய்தேன்.



**– யாஸ்மின்,** கோயமுத்தூர்

நான் உறுப்பினராக உள்ள மகளிர் சுய உதவிக் குழுவின் மூலம் எனக்கு வங்கிக் கடனாக வழங்கப்பட்ட 2 இலட்சம் ரூபாயினை முதலீடாகக் கொண்டு, யாருக்கும் பயனற்றது என்று கருதி தூக்கி எறியப்படும் பேரீச்சம் பழக் கொட்டைகளைக் கொண்டு பயனுள்ள கால்நடைகளுக்கான தீவனம் தயாரிக்கும் முயற்சிகளை மேற்கொண்டேன். முதலில் சிறிய அரவை இயந்திரம் ஒன்றை வாங்கி, அதன் மூலமாக மாதத்திற்கு 5,000 கிலோ வரையில் பேரீச்சம் பழக் கொட்டையில் கால்நடைகளுக்கான தீவனத்தை உற்பத்தி செய்து விற்பனை செய்து வந்தேன்.

அடுத்த கட்ட முயற்சியாக மாவட்ட தொழில் மையம் மூலமாக நடைபெற்ற 10 நாள் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றேன். பயிற்சிக்குப்பின் சுய தொழில் கடனும் எனக்கு வழங்கப்பட்டது. அதனைக் கொண்டு மேலும் மூன்று அரவை இயந்திரங்களை வாங்கி, தொழிலினை விரிவுபடுத்தினேன்.

தற்சமயம் மாதம் ஒன்றுக்கு 50,000 கிலோ அளவிற்கு பேரீச்சம் பழக் கொட்டைகளைக் கொண்டு கால்நடைகளுக்கான தீவனம் தயாரித்து விற்பனை செய்து வருகிறேன். எனது தொழிற்கூடத்தில் 10 பெண்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனது வாழ்வதாரத்தை வளம் பெறச் செய்த தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# வெற்றிக்குக் காரணமான தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்

தேனி மாவட்டம், அல்லிநகரம் நகராட்சியில் 29-வது வார்டு ஆற்றாங்கரை தெருவில் எங்களது குழு கடந்த 15 ஆண்டுகளாக நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. நாங்கள் வசிக்கும் பகுதி குடிசை பகுதி ஆகும். அதன் அருகில் கொட்டக்குடி ஆறு செல்கிறது. சுமார் 200 குடும்பங்கள் அந்த பகுதியில் உள்ளன. எங்களது வீட்டில் கழிப்பறை கடந்த 15 ஆண்டுகளுக்கு முன் இல்லாத காரணத்தால் சுமார் 500 மீட்டர் தொலைவில் உள்ள பேருந்து நிலையத்தில் உள்ள கழிவறைக்குத்தான் செல்ல வேண்டும். மேலும், அந்தக் கழிப்பிடத்தைப் பயன்படுத்த கண்டிப்பாக பணம் செலுத்தினால் மட்டுமே அந்தக் கழிப்பிடத்திற்குள் செல்ல முடியும். அதனால் அநேக குடும்பத்தினர் எங்கள் பகுதியின் அருகில் உள்ள ஆற்றுப்பகுதியை கழிப்றையாக பயன்படுத்தி வந்தோம். மழைக்காலத்தில் ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகம் இருக்கும் காலத்தில் மிகவும் சிரமப்பட்டோம். அதிலும் குறிப்பாக இளம் பெண்கள் மாதவிடாய் காலத்தில் பட்ட கஷ்டங்களை சொல்வதற்கு வார்த்தையே இல்லை.

அப்போதுதான் தேனி நகராட்சியில் பணிபுரியும் சமுதாய அமைப்பாளர்கள் எங்களை சந்தித்து பேசினர். அப்போதுதான், “எவ்வளவு சுகாதாரமற்ற வாழ்க்கையை வாழ்ந்து வருகிறோம் என்றும். ஆற்றை எந்த அளவு மாசுபடுத்தியுள்ளோம். எங்களது பகுதியை எவ்வளவு அசிங்கப்படுத்திள்ளோம்” என்பதை புரிந்து கொண்டோம்

அப்போது எங்களுக்கு மகளிர் குழு பற்றியும், சேமிப்பு பற்றியும் மற்றும் வெளியே வட்டிக்கு வாங்கியதால் படும் சிரமங்களையும் களைந்திட தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் ஸ்ரீ பத்ரகாளியம்மன் மகளிர் குழுவினைத் துவக்கி, ஒவ்வொரு உறுப்பினரும் ரூ.50/- வீதம் சேமிக்கத் துவங்கினோம்.

எங்களது குழுவின் உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து நகராட்சி ஆணையாளரிடம் எங்களது பகுதியில் சுகாதார கழிப்பிடம் வேண்டும் என பல முறை மனு கொடுத்தோம். அதன் பலனாக எங்களது பகுதியில் ஒரு கழிப்பிடத்தை தேனி நகராட்சி மூலம் கட்டி, அதை எங்களது குழுவிடமே ஒப்படைத்து “நீங்கள் தான் நல்ல முறையில் வளாகத்தை பராமரிப்பு செய்ய வேண்டும்” என்றபோது நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தோம்.

எங்களது வசம் கழிப்பிட வளாகம் வந்த பின்பு, துப்புரவு பணியாளர்கள் வராதநாட்களில்நாங்களேகழிப்பிடத்தை முழுவதுமாக சுத்தம் செய்ய ஆரம்பித்தோம். கட்டிடத்தை சுற்றி மரம் மற்றும் செடிகளை வைத்து அழகுபடுத்தினோம். மேலும் சுற்றியுள்ள பகுதியில் வசிக்கும் மக்களை சந்தித்து பொதுக் கழிப்பிடத்தை பயன்படுத்தும் முறையைப் பற்றி விளக்கி கழிப்பிடத்தைப் பயன்படுத்த வலியுறுத்தியதுடன், கழிப்பிடத்தை சுத்தமாகப் பராமரிக்க ரூ.2/- கட்டணம் வசூலித்தோம். குழுவின் சார்பில் யூனியன் வங்கியில் ரூ.6,00,000/- கடன் பெற்று குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் பல்வேறு தொழில்களை செய்து வருகிறோம். எங்களது வளர்ச்சியை பார்த்து எங்கள் குழுவுடன் 6 மகளிர் குழுக்கள் இணைந்துள்ளன. எங்களது வெற்றிக்குக் காரணமான தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

உறுப்பினர்கள்,

**ஸ்ரீ பத்ரகாளியம்மன் மகளிர் குழு**



தீனதயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம்

## தன்னம்பிக்கையால் கிடைத்த வெற்றி



என் பெயர் பபிதா, நான் வேலூர் நகரில் வசித்து வருகிறேன். எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். என்னுடைய கணவர் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகின்றார். அவரின் சம்பளம் குடும்ப அன்றாட செலவுகளுக்கு போதுமானதாக இல்லாமல் குடும்பத்தை நடத்துவதற்கு சிரமமாக இருந்ததால், நான் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலைக்கு சென்றேன். எனக்கு அங்கு பணி செய்வதில் திருப்தி இல்லாததால் சொந்தமாக சுயதொழில் தொடங்க வேண்டும் என்று முடிவு செய்தேன்.

அச்சமயம் இந்தியன் வங்கி, ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தில் நடக்கும் பயிற்சியில் சேர்ந்து 30 நாட்கள் பயிற்சி பெற்றேன். பின்பு நான் என்னுடைய கணவரின் உதவியுடன் ரூபாய் 80 ஆயிரம் முதலீடு செய்து “வாவ்” என்ற பெயரில் அழகு நிலையம் தொடங்கி, சுயமாகத் தொழில் செய்து வருகின்றேன். இதன் மூலம் மாதம் ரூபாய் 25 ஆயிரம் வரை வருமானம் பெறுகின்றேன். அதுமட்டுமல்லாமல் என்னுடைய அழகு நிலையத்தில் மூன்று நபர்களுக்கு வேலை வாய்ப்பும் அளித்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பொருளாதார வளர்ச்சிக்கு உதவிய திறன் பயிற்சி திட்டம்



என் பெயர் ஆ.ராஜ்குமார். எனது தந்தை பெயர் ஆறுமுகம். நான் 12ம் வகுப்பு முடித்துள்ளேன்.

எனது சொந்த ஊர் விழுப்புரம். குடும்பச் சூழ்நிலை காரணமாக என்னால் படிப்பைத் தொடர முடியவில்லை. வேலை தேடிக் கொண்டிருந்தேன். நான் பள்ளிப் படிப்பை மட்டுமே முடித்து இருந்ததால் பல நிறுவனங்கள் எனக்கு வேலை தராமல் நிராகரித்தன. அப்போது நான் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் விக்கிரவாண்டியில் நடைபெற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு முகாமிற்கு சென்றிருந்தேன். அங்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் DDU-GKY திட்டம் பற்றி தெரிந்து கொண்டேன்.

எனக்கு இரண்டு சக்கர வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலில் ஆர்வம் இருந்ததால் "Metamorphosis” என்ற நிறுவனம் இரு சக்கர வாகனப் பயிற்சி வழங்குவது பற்றியும் மற்றும் அரசாங்கத்தால் வழங்கப்படும் நன்மைகள் பற்றியும் விளக்கிக் கூறினர். அதனால் நான் “Metamorphosis Engineering and Skill Development Services Private Limited"-இல் பயிற்சிக்கு சேர்ந்தேன். 3 மாதப் பயிற்சியில் எனது தொழில்நுட்ப அறிவு, ஆங்கிலத் திறன், தகவல் தொழில்நுட்பத் திறன் மற்றும் தகவல் தொடர்புத் திறன் ஆகியவற்றை வளர்த்துக் கொண்டேன். பயிற்சி காலத்தில் எனக்கு அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டன.

பயிற்சி நிறுவனத்தில் எனக்கு வழங்கப்பட்ட பயிற்சி எனது வாழ்க்கைக்கு மிகவும் உதவியாக இருந்தது. பயிற்சிக்குப் பிறகு, சென்னை, வேளச்சேரியில் உள்ள "Brilliant TVS" நிறுவனத்தில் இருசக்கர வாகன சேவை உதவியாளராக, மாதம் ரூ.12,000/- ஊதியத்தில் நான் நியமிக்கப்பட்டேன். நிறுவனம் உணவு மற்றும் தங்குமிடத்தையும் வழங்குகிறது. எனது வருமானம் எனது குடும்பத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

எனக்குப் பயிற்சியும், பயிற்சிக்குப் பின்னர் வேலைவாய்ப்பும் பெற்றுத் தந்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், DDU-GKY மற்றும் மெட்டாமார்போசிஸ் இன்ஜினியரிங் மற்றும் ஸ்கில் டெவலப்மென்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் ஆகியவற்றிற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**காகிதப்பொருளில் கலை வடித்தேன்!**
**கற்பித்து மங்கையரின் திறன் வளர்த்தேன்!**

என் பெயர் அஞ்சலி, (வயது 26), தூத்துக்குடி மாவட்டம், கீழபுத்தனேரி கிராமத்தில் வசித்து வரும் நான் ஒரு திருநங்கை, பல்வேறு பாகுபாடு மற்றும் இன்னல்களை நான் சந்தித்தபோதும் எனது இலட்சியத்தின் மூலம் என் வாழ்விற்கு வேண்டியவற்றை நான் சம்பாதித்து வருகின்றேன்.

நான் ஒரு நடனக் கலைஞர், கடந்த பெருந்தொற்றின் போது எனது தொழில் மொத்தமாக முடங்கி எனது வீட்டிலேயே முடக்கப்பட்டேன். இந்த வேளையில் எனது நேரத்தை நான் வீணடிக்காமல், எனது பொழுதுபோக்கு பழக்கமான காகிதத்தில் மலர் குவளைகள், பைகள், சிறு சிறு பரிசுப் பொருட்கள் போன்ற கைவினைப் பொருட்களை செய்யத் தொடங்கி, அவற்றை இணையத்தில் காட்சிப்படுத்தினேன்.

அந்தப் படைப்புகளைப் பார்த்து எனக்கு பெரிய வரவேற்பு கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. எனது படைப்புகள் அனைவராலும் விரும்பப்படுவதால் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப பரிசு கைவினைப் பொருட்களை செய்யும் வாய்ப்புகள் நிறைய வருகின்றன. தற்பொழுது எனது காகித கைவினைப் பொருட்களை விற்று மாதம் ரூ. 15,000/- வரை வருவாய் ஈட்டி வருகின்றேன்.

எனது சகோதரி சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளார். அவரது சுய உதவிக் குழு மூலம் நான் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு அறிமுகம் ஆனேன். திட்டத்தால் நடத்தப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில், எனது காகித கைவினைக் கலையைப் பிறருக்கும் பயிற்றுவிக்க என்னிடம் கேட்டுக் கொண்டனர். அதன் அடிப்படையில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் சமுதாயத் திறன் பள்ளி (CSS) மூலம் பல்வேறு மகளிருக்கு காகித கைவினைக் கலையைப் பயிற்றுவித்தேன். இந்தப் பயிற்சியை அளிப்பதற்கு எனக்கு முதலில் தயக்கமாக இருந்தது, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினர் கொடுத்த தைரியம் மற்றும் ஊக்கத்தினால் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் கொடுத்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டேன்.

இந்த CSS பள்ளியின் வழியாக 20 பயனாளர்களுக்கு 20 நாட்கள் பயிற்சியளித்தேன். என்னிடம் பயிற்சியைப் பெற்றப் பயனாளர்களில் குடும்பத் தலைவிகள் மற்றும் 100 நாள் வேலைக்குச் செல்லும் மகளிர் ஆகும். எனவே இவர்களுக்கு நிலையான வருவாய் இல்லாமல் இருந்தது. இவர்களுக்கு நிலையானத் தொழில் வாய்ப்பை உருவாக்க காகிதத்தில் பைகள், மலர் குவளைகள், கோப்புகள், காகித ஹோல்டர்கள், எழுதும் அட்டை, பரீட்சை அட்டை மற்றும் வீட்டு அலங்காரப் பொருட்கள் போன்றவற்றைத் தயாரிக்கக் கற்றுக் கொடுத்தேன்.

பயிற்சியில் பங்கேற்ற உறுப்பினர்களில் ஒருவரான மாலதி கூறுகையில் “எந்த வருமானமும் இன்றி வீட்டில் இருந்த நான், இந்தப் பயிற்சியை எடுத்துக் கொண்டதன் மூலம் தினமும் கூலி வேலைக்கு செல்கின்றேன், எனக்கு வருமானம் வரத் தொடங்கியுள்ளது” என்றார். இதேபோன்ற குரல் அனைத்து உறுப்பினர்களிடமும் எதிரொலித்தது.

பயிற்சிக்குப் பிறகு உறுப்பினர்கள் தொழில் வாய்ப்பினைப் பெற, அவர்கள் தயாரித்த பொருட்களை இணையத்தில் காட்சிப்படுத்த ஊக்குவித்தேன். மேலும், காகித கைவினைப் பொருட்களை அரசு அலுவலகங்கள், பெட்டிக் கடைகள், பரிசுப்பொருள் விற்கும் கடைகள், திருமணங்கள், பிறந்த நாட்கள் மற்றும் இதர விழாக்களுக்குத் தேவையுள்ளவர்கள் என அனைவரும் எங்களது வாடிக்கையாளர்களாக உள்ளனர். தற்போது என்னிடம் பயிற்சிப் பெற்ற உறுப்பினர்கள் தனித்தனியாகவே இயங்குகின்றனர், இவர்களுக்கு வேலை வாய்ப்புகளையும், சுயதொழில் வாய்ப்புகளையும் உருவாக்கி வருகின்றேன்.

நீண்ட காலமாக எனது பொழுதுபோக்காக இருந்த இந்த காகிதக் கலைத்தொழிலை மற்றவர்களுக்கும் கற்பித்ததில் எனக்கு அளவற்ற மகிழ்ச்சி கிடைத்து, பயிற்சி பெறுபவர்கள் அனைவரும் பொருளை உருவாக்க வேண்டும் என்று நான் விரும்பினேன், அதனால் அவர்கள் தங்களைத் தாங்களே சிறப்பாக உருவாக்கிக் கொண்டு, உற்பத்திகளின் மூலம் கூடுதல் வருவாயைப் பெற்று வருகின்றனர். எனது அனுபவம் தங்கள் திறன்களைப் பற்றி சந்தேகிக்கும் மற்றவர்களுக்கும் ஒரு உத்வேகமாக இருக்கும் என்று நம்புகிறேன்.



## கடல் சிப்பிக் கலைப்பொருள் தந்தது! கற்றத் திறன் வளத்தைத் தந்தது!

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வட்டாரம், பிரப்பன் வலசை ஊராட்சியில் செயல்படும் கடுகை மங்கையர் கடல் சிப்பி கைவினைப்பொருட்கள் தொழிற்குழுவின் வெற்றி குறித்து தெரிந்து கொள்வோம் வாருங்கள். இந்த தொழிற்குழுவில் 25 முதல் 45 வயது கொண்ட 27 மகளிர் ஒருங்கிணைந்து செயல்படுகின்றனர். இவர்கள் தங்கள் ஊராட்சியில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் சமுதாயத் திறன் பள்ளி வழியாக நடத்தப்பட்ட கைவினைப் பொருட்கள் தொழிற்பயிற்சியில் பங்கேற்றுப் பயனடைந்துள்ளனர். இப்பயிற்சியின் வழியாக தங்கள் தொழிற்திறனை மேம்படுத்திக் கொண்டதுடன் கடல் சிப்பியில் சின்ன சின்ன அழகழகான கலைப் பொருட்களை செய்யவும் கற்றுக் கொண்டனர்.

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் இந்த கிராமத்திலுள்ள தொழில் வாய்ப்புகளை கண்டறிய வந்தபோது கிராமத்திலுள்ளோர் கடல் சிப்பி வழியாக சிறு சிறு கலைப்பொருட்களை செய்து வந்தனர், ஆனால், அவற்றின் மூலம் முறையான வருவாயை ஈட்டத் தெரியாமல் இருந்தனர். எனவே, இக்கிராமத்திலுள்ள மகளிருக்கு கடல் சிப்பியில் பல்வேறு கலைப்பொருட்களைத் தயாரிக்கும் தொழிற் பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சிக்கான மூலப்பொருட்கள் திட்டத்தால் வழங்கப்பட்டு அதிலிருந்து பொம்மைகள், கொரோனா பந்துகள், விநாயகர் சிலைகள், அலங்காரப் பொருட்கள், சாவிக்கொத்துகள், நீர் அருவிகள், பூங்கொத்துகள் மற்றும் நினைவுப்பரிசுப் பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிக்க பயிற்றுவிக்கப்பட்டனர்.



சமுதாயத் திறன் பள்ளிப் பயிற்சி 2021 டிசம்பர் முதல் ஜனவரி 2022 வரை நடைபெற்றது. அடுத்ததாக 2022 பிப்ரவரி மாதம் பயிற்சிப் பெற்றவர்களை ஒருங்கிணைத்து தொழிற்குழுவாக உருவாக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து இரண்டு மாதங்கள், மீதமிருந்த கடல் சிப்பியில் கலைப்பொருட்களை உற்பத்திச் செய்து விற்று வந்தனர். இவர்களின் செயல்பாட்டை கண்டு திட்டத்தின் மூலம் தொடக்க நிதி ரூ. 75,000 வழங்கப்பட்டது, அதில் இத்தொழிற்குழுவினர் மூலப்பொருட்களை வாங்கி தொழிலை சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

இந்தத் தொழில் மிகவும் நுணுக்கமானது என்பதால் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது, அதனால் 3 முதல் 4 மணி நேரத்திற்கு மேல் இதில் வேலை செய்ய முடியாது. எனவே, ஆட்கள் உள்ளதன் அடிப்படையில் குழுவினர் சுழற்சி முறையில் நேரத்தினைப் பங்கிட்டுப் பணியாற்றி அவரவர் உற்பத்திச் செய்யும் பொருட்களுக்கான வருவாயை அவரவரே எடுத்துக் கொள்கின்றனர். மேலும் சில மகளிர் இந்த கைவினைப் பொருள் உற்பத்தி மட்டுமின்றி 100 நாள் வேலைக்கும் செல்வதுடன், அவரவர் கணவரின் மீன் வலையை சுத்தம் செய்யும் பணியையும் செய்து வருகின்றனர்.



இக்குழுவினர் இராமநாதபுரத்தில் நடத்தும் கண்காட்சியின் மூலமும் கலா மார்ட் மற்றும் ஆட்சியர் அலுவலகத்தின் மூலமும் அதிக வணிக வாய்ப்புகளைப் பெறுகின்றனர். இவர்களின் உற்பத்திகளில் பூங்கொத்து, க்ளிப், பொம்மைகள் போன்றவை உள்ளடங்கும். இவர்கள் தயாரிக்கும் பூங்கொத்துகளை ரூ.150/- க்கு விற்பனை செய்கின்றனர், பிற இடங்களில் இந்த பூங்கொத்துகளின் விலை ரூ.300/- முதல் ரூ. 400/- வரை விற்கப்படுகின்றன. இக்குழுவினரின் எதிர்கால இலட்சியம், இத்தொழிலை விரிவாக்குவதும், இராமநாதபுரத்தில் ஒரு கடையைத் திறந்து சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதும் ஆகும்.

# தரமான வாழைக்கு, முறையான நுண்ணூட்டம்... பனானா சக்தி!

தமிழ்நாடு அரசு மற்றும் உலக வங்கி நிதியுதவியுடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் செயல்படுத்தி வரும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் முசிறி, அந்தநல்லூர், மணப்பாறை, மணிகண்டம் மற்றும் துறையூர் வட்டாரங்களைச் சார்ந்த 135 ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ், ஸ்ரீரங்கம் வாழை உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்பு என்ற நிறுவனம், வாழை உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தல், மதிப்புக் கூட்டுதல், சந்தைப்படுத்தல் போன்ற நோக்கங்களுடன் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் அந்தநல்லூர் ஒன்றியத்தில் உருவாக்கப்பட்டது. இதில் 1200 பெண் வாழை உற்பத்தியாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்நிறுவனம் முதற்கட்டமாக வாழை உற்பத்தியை அதிகரித்திடும் நோக்கத்தில் அதற்கான இடுபொருட்களை தயாரித்தல் மற்றும் கூடுதல் இடு பொருட்களை விற்பனை செய்யும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

அந்தநல்லூர் வட்டாரத்தில் வாழை சாகுபடி சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வாழைப் பயிர் பொதுவாக அதிக நீர் மற்றும் ஊட்டச்சத்துக்கள் தேவையுள்ள பயிராகும். ஆனால், நடைமுறையில் முக்கிய சத்துக்களான தழைச்சத்து, மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்துக்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் நுண்ணூட்ட சத்துக்களுக்கு கொடுப்பதில்லை. இதனால் தேவையான அளவு உரம் இட்ட தோட்டங்களில் கூட மரங்களின் வளர்ச்சி குன்றி மகசூல் குறைவதுடன், தரக் குறைபாடு ஏற்படுவதுண்டு. எனவே இந்த குறைபாடுகளை களைய முக்கிய சத்துக்களுடன் நுண்ணூட்டச் சத்துக்களை கலந்து உரிய விகிதத்தில் கொடுப்பதன் மூலம் வாழைத் தார்களின் தரத்தை மேம்படுத்தலாம், இதற்காக கண்டுபிடிக்கப்பட்டதே 'பனானா சக்தி' என்ற வாழை நுண்ணூட்ட சக்தி.

தேசிய வாழை ஆராய்ச்சி மையம், திருச்சியின் கண்டுபிடிப்பான "பனானா சக்தி (Banana Sakthi)" என பெயரிடப்பட்டுள்ள நுண்ணூட்டச் சத்துக் கலவையை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் வீதம் கலந்து வடிகட்டி அதனுடன் ஒட்டும் திரவம் கலந்து வாழை கன்று நட்ட 3,4,5,6 மற்றும் 7-ம் மாதங்களில் இலைகளில் நன்கு நனையும்படி தெளிப்பதன் மூலம் வாழை கன்றின் வளர்ச்சி நன்றாக இருக்கும். மேலும் இந்த நுண்ணூட்ட கலவையை அளிப்பதனால் அதிக எண்ணிக்கையில் சீப்புகளும், காய்களும் எவ்வித வெடிப்பும் இன்றி நல்ல தரத்துடன் பெற முடியும்.

பனானா சக்தி நுண்ணூட்டச் சத்துக் கலவையில் மாங்கனீசு 4.50%, இரும்பு - 4.75%, துத்தநாகம் 5.25%, தாமிரம் - 2.40% மற்றும் போரான் - 2.5% என மூலப்பொருட்கள் கலந்துள்ளன.

## பயன்பாட்டு முறை:

- 3,4,5,6 மற்றும் 7 ஆகிய மாதங்களில் 1 கரைசல் (1 கிலோ பனானா சக்தியை 10 லிட்டர் தண்ணீருடன் கலந்து இரண்டு நாட்களுக்கு ஊறவைக்க வேண்டும் பிறகு 10 லிட்டர் பனானா சக்தி தெளிவு நீரை எடுத்து 90 லிட்டர் தண்ணீருடன் 5 எலுமிச்சம் பழச் சாறு கலந்து 100 லிட்டர் தெளிப்பு திரவமாக தயாரிக்க வேண்டும்)
- இத்தெளிப்பு திரவத்தை, தகுந்த ஒட்டும் திரவத்துடன் சேர்த்து, காலை அல்லது மாலை வேளையில், இலைகள் நன்கு நனையும்படி தெளிப்பானைக் கொண்டு தெளிக்க வேண்டும்.
- கலவை ஊற வைத்த வாளியில் தேங்கியுள்ள கசடை 10 அல்லது 15 வளர்ச்சி குறைந்த, பலவீனமான சிறிய வாழைக் கன்றுகளின் வேர்ப்பகுதியில் மண்ணில் ஊற்றி விடலாம்.

## பயன்பாடுகள்:

- இது நுண்ணூட்டச்சத்து குறைபாட்டை சரி செய்து பேரூட்டச்சத்துக்கள் மற்றும் நுண்ணூட்டச்சத்துக்கள் கிடைக்கும் தன்மையை அதிகரிக்கிறது.
- வாழை பயிருக்கு நுண்ணூட்டச்சத்துக்களை வழங்குவதன் மூலம் உற்பத்தித்திறன் 15-20% அதிகரிக்கும்
- வாழை ருசித்ததன்மை 2.4% அதிகரிக்கிறது
- பனானா சக்தி பயன்படுத்துவதால் வாழையில் அமிலத்தன்மை குறைகிறது அமிலத்தன்மை குறைப்பதன் மூலம் வாழையில் சுவை, இனிப்பு மற்றும் வாசனை அதிகரிக்கிறது

இந்த பனானா சக்தியின் மூலம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வாழையின் உற்பத்தி தரமான முறையில் வளமான வழியில் அதிகரித்து வருகிறது.



# தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம்

## செயற்கை பவளப்பாறைகள் நிறுவுதல் (சமுதாய உட்கட்டமைப்புபணி)



மீனவர்களின் முக்கிய வாழ்வாதாரமான மீன்பிடி தொழிலுக்குத் தேவையான அளவு மீன்கள் கடலில் கிடைப்பதில்லை. குறிப்பாக தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின்; பயனாளிகளான நாட்டுப்படகு மீனவர்களின் நிலை நாளுக்கு நாள் மிகவும் மோசமாகி கொண்டே வருகிறது. இதை பல்வேறு மீனவ கிராமங்களில் நடந்தப்பட்ட கூடுதல் திட்ட இயக்குநர் தலைமையிலான ஆய்வு குழுவின் ஆய்வறிக்கையின் அடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் 40 நாட்டு படகு மீனவர்களுக்கு மேல் வசிக்கும் 10 பெரிய மீனவ கிராமங்களை அடையாளம் கண்டு அந்தந்த கிராமங்களுக்கு நேர்திசையில் சுமார் 150 செயற்கை பவளப் பாறைகள் வீதம் 10 கிராமங்களிலும் சுமார் 1500 செயற்கை பவளப் பாறைகள் ரூ.2.53 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளன. இந்த பவளப் பாறைகள் இந்திய கடல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன வல்லுநர்களின் மேற்பார்வையில் நிறுவப்பட்டுள்ளன.

செயற்கை பவளப் பாறைகளை கடல் நீருக்கடியில் நிறுவுவதால் கடலில் மீன்கள் தங்களின் முட்டைகளை பாதுகாத்து குஞ்சு பொறிப்பதன் மூலம் உற்பத்தி கணிசமாக அதிகரித்துள்ளது. மேலும் விசைப்படகு மீனவர்கள் நாட்டுப் படகு மீனவர்களின் மீன்பிடி எல்லைக்குள் வருவதை இப்பாறைகள் முற்றிலுமாக தடுக்கிறது. அதையும் மீறி விசைப்படகு மீனவர்கள் மீன் பிடித்தால் அவர்களின் வலையை இந்த பவளப்பாறைகள் சேதப்படுத்திவிடும். நாட்டுப்படகு மீனவர்களுக்கு பவளப்பாறைகள் நிறுவப்பட்டுள்ள பகுதியை கருவி மூலம் அடையாளம் காட்டப்பட்டு அவற்றைக் கொண்டு எளிதில் எரிபொருள் செலவின்றி அதிக மீன்களை பிடித்து வருகின்றனர். இந்த பவளப்பாறைகள் நிறுவப்பட்டபின் மீன்வளம் அதிகரித்து மீனவர்களின் வாழ்வாதாரம் வளர்ச்சி அடைந்துள்ளது. மேலும் இந்த பவளப்பாறைகள் மூலம் கடல் தான் இழந்த வளங்களை மீண்டும் உற்பத்தி செய்து கொள்ள பெரும் உதவிகரமாக உள்ளது.

## தாரா நர்சரி கார்டன் கூட்டுப் பொறுப்புக்குழு



தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் வழிகாட்டுதலில் செங்கல்பட்டு மாவட்டத்தில் முட்டுக்காடு ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பின் மூலம் வளர்பிறை சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் கூட்டுப் பொறுப்புக் குழுவாக ஒன்றிணைந்து தாங்கள் வாழ்வாதாரம் பெற்ற வெற்றிக் கதையை கூறுகின்றனர். ‘திருமதி. கௌசல்யா, திருமதி தாஹிரா, திருமதி பாண்டியம்மாள், திருமதி செல்வி, திருமதி அன்னக்கிளி ஆகிய நாங்கள் முன்பு நர்சரி கார்டனில் கூலிக்கு வேலைக்கு சென்று வந்தோம், கூட்டமைப்பில் இருந்து தொழில் செய்வதற்கு கடன் தொகை வழங்குவதாக தெரிவித்தனர். அதனை தொடர்ந்து எங்களுடைய பங்கு தொகையாக ரூ.7,500/, கோவளம் இந்தியன் வங்கியிலிருந்து கடன் தொகையாக ரூ.1,42,500/- என மொத்தம் ரூ.1,50,000/-பெற்று 28.06.2022 அன்று இத்தொழிலை தொடங்கினோம். இவற்றில் கிடைத்த வருமானத்தை கொண்டு கடன் தொகையில் ரூ.47,412/- வங்கியில் கடன் திருப்பம் செய்துள்ளோம் இதுவரை ரூபாய் 3,03,460/- வருமானம் பெற்றுள்ளோம் இவற்றில் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கு ரூ.6,000/- முதல் ரூ.6,500/- வரை இலாபமாக கிடைக்கிறது. இவ்வருமானத்தைக் கொண்டு எங்களுடைய குழந்தைகளின் படிப்பு செலவை நாங்களே பார்த்துக் கொள்கிறோம். இத்தொழில் மூலம் முன்பு இருந்ததை விட தற்போது வாழ்க்கைத் தரமும் உயர்ந்துள்ளது. எங்களுடைய வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உதவிய தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு எங்களின் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

சுய உதவிக் குழுக்களின்
செயல்பாடுகளை அறிந்திட
**முற்றம் படியுங்கள்!**

முற்றம் மேலும் மேலும்
வளர்ந்திட உங்களின்
**ஆதரவை
தாருங்கள்!**







முற்றத்திற்கு சந்தா
**செலுத்திடுங்கள்!**

புத்தகத்தைப் படிக்க என்னை
**Scan செய்யவும்**

| முற்றம் இதழின் சந்தா விவரம் | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 240/- |
| இரண்டு ஆண்டு | ரூ. 450/- |
| மூன்று ஆண்டு | ரூ. 680/- |

| விளம்பரக் கட்டணம் | |
|---|---|
| அட்டையின் 2-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் 3-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் பின்பக்கம் | ரூ. 50,000/- |
| புத்தகத்தின் உள்பக்கம் | ரூ. 35,000/- |

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

**வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும்.**

**விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி**


முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

# சத்தும், சுவையும் நிறைந்த தர்பூசணி அடை

நீர்ச்சத்து நிறைந்த தர்பூசணியில் ஜூஸ், ஐஸ்கிரீம் மட்டுமல்ல பல்வேறு சுவையான உணவுகளையும் செய்யலாம். அந்த வகையில் தர்பூசணியில் அடை செய்வது எப்படி என்று பார்க்கலாம்.

**தேவையான பொருட்கள் :**

தர்பூசணி - 1, புழுங்கல் அரிசி - 1 கப், துவரம்பருப்பு - 2 டேபிள்ஸ்பூன், தேங்காய் துருவல் சிறிதளவு, பச்சை மிளகாய் - 3, கறிவேப்பிலை சிறிதளவு, கொத்தமல்லித்தழை - சிறிதளவு உப்பு, எண்ணெய் தேவையான அளவு

**செய்முறை:**

தர்பூசணி பழத்தின் தோலை மெலிதாக சீவிவிட்டு, வெள்ளை நிறப்பகுதியை மட்டும் தனியாக வெட்டி எடுத்து துருவிக் கொள்ளவும். அரிசியையும், துவரம் பருப்பையும் தண்ணீரில் ஒரு மணி நேரம் ஊற வைத்துக் கொள்ளவும். பின்னர் அதனுடன் மிளகாய், உப்பு சேர்த்து அரைத்துக் கொள்ளவும். அரைத்த மாவு கலவையுடன் தர்பூசணி துருவல், தேங்காய் துருவல், கறிவேப்பிலை, கொத்தமல்லி தழை சேர்த்து பிசைந்து கொள்ளவும். அடுப்பில் தோசைக் கல்லை வைத்து அது சூடானதும் எண்ணெய் விட்டு தடவி, மாவை அடைகளாக தயார் செய்து தோசைக் கல்லில் போடவும். மாவு ஒருபுறம் வெந்ததும் திருப்பி போட்டு மறுபுறத்தையும் வேக வைத்து எடுக்கவும்.

சுவையும், சத்தும் நிறைந்த தர்பூசணி அடையை சிறுவர் முதல் பெரியவர்கள் வரை விரும்பி சாப்பிடுவார்கள்.

# கோடைக்காலத்தில் பயனுள்ள குறிப்புகள்

கோடைக்காலத்தில் தகிக்கும் சூரியக்கதிர்களால் மனிதர்கள் மட்டுமின்றி எல்லா உயிர்களும் மிகவும் அவதிக்குள்ளாகின்றன. கோடைக்காலத்தில் நாம் நம் உடல்நலத்தையும், அதன் தட்பவெப்பத்தையும் சரியான விகிதத்தில் பேணிக்காப்பது அவசியமாகும். அதற்காக நம் மண்ணின் பாரம்பரிய மருத்துவக் குறிப்புகள் சிலவற்றை இங்கு பார்ப்போம் வாருங்கள்.

- குளிர்சாதனப் பெட்டி கொண்டு குளிர்விக்கப்படும் நீரை தவிர்த்து நம் பாரம்பரிய மண்பானை நீரை அதிகம் குடியுங்கள். இதன் மூலம் நமது உடலுக்கு குளிர்ச்சி கிடைக்கும்.
- கோடைக்காலத்தில் நமது உடலில் இருந்து அதிகப்படியான வியர்வை வெளியேற வாய்ப்புண்டு. இதன் காரணமாக நம் ரத்தத்தில் உப்பிழப்பு ஏற்படலாம். இதனை தவிர்க்க சர்க்கரை மற்றும் உப்பு கலந்த நீரை அடிக்கடி குடிக்கலாம்.
- கோடைக்காலத்தில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பலருக்கும் வியர்க்குரு, சிறு கட்டிகள் போன்றவை வர வாய்ப்புண்டு. இதனை தவிர்க்க அரைத்த சந்தனத்தை பூசிக்கொள்ளலாம்.
- வெயில் காலத்தில் நமது மனம் நிழலை தேடுவது இயல்பு. எப்போதும் AC அறையிலே இருக்காமல் வேப்ப, புங்க மரங்களின் நிழல்களில் முடிந்த அளவிற்கு இளைப்பாருங்கள். இதன் மூலம் உடலும், மனமும் புத்துணர்வு அடையும்.

Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029. Published from (1,27,500 Copies Circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor : S. CHINNAPPAN.

மகளிர் வாழ்வாதாரம் தொடர்பான

# வாய்ப்புகள், நலத்திட்டங்கள், நிதி உதவிகள்

## மற்றும் ஊரக நகர்ப்புர இளைஞர்களுக்கான திறன் பயிற்சிகள் குறித்த வழிகாட்டுதல்கள் பெற

வாழ்வாதார உதவி அழைப்பு எண்

# 155 330

LIVELIHOOD HELPLINE NUMBER



**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்**

அன்னை தெரசா மகளிர் வளாகம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034 | 044-28173415, ugkytn2016@gmail.com

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2021-2023 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2021-2023
Date of Publication : 1st Week of the every month Posted between 8th – 14th May 2023 Posted at Patrika Channel, Egmore



TNULM

TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

*Empowering Lives*

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம்
நகர்ப்புற ஏழை எளிய மக்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் நகர்ப்புற வீடற்றோருக்காக
பல்வேறு திட்டங்களை தீட்டி தமிழக அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருவது
பெருமைக்குரியது.